REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 செப்டெம்பர் 7 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 88 இல. 212 | September 07,Monday, 2020 | 20பக்கங்கள் | 30/-






# மத்திய சுகாதார சேவை கட்டமைப்பின் அவசியத்தை உணர்த்திய கொவிட்-19

**இளம் மருத்துவர்கள் மத்தியில் ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு**

- பதவிக்காலத்திற்குள் ஆரோக்கியமான பிரஜைகளை உருவாக்குவதாக உறுதி
- கிராமிய மக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்குவதற்கு புதிய உத்திகள்

மத்திய சுகாதார சேவைக் கட்டமைப்பொன்றைநடைமுறைப்படுத்தவேண்டியதன் முக்கியத்துவத்தை கொவிட் – 19 நோய்த் தொற்று எமக்கு கற்றுத் தந்துள்ளது. நாம் இதை ஒரு பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இலங்கையில் பல்வேறு வைத்தியசாலைகள் மாகாண சபையினால் நிர்வகிக்கப்பட்டு வந்தாலும் சுகாதார பிரச்சினைகளின் போது பயன்படுத்தக்கூடிய வகையில் நாடு முழுவதும் பல்வேறு வைத்தியசாலைகள் சுகாதார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. சுகாதார சேவை முழுமையாக மாகாண சபைகளுக்கு 06

எரிபொருள் கப்பலில் தீ

## சட்ட நடவடிக்கை தொடர்பில் சட்ட மாஅதிபர் ஆராய்வு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ள நியூ டயமன்ட் எரிபொருள் கப்பலின் தீ பரவல் தொடர்பில் வெளிவரும் தகவல்களுக்கிணங்க சட்ட மாஅதிபர் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நேற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மேற்படி அனர்த்தத்துடன் தொடர்புடைய சட்ட ரீதியான விடயங்கள் தொடர்பில் இங்கு மீளாய்வு செய்துள்ளதுடன் உரிய ஆலோசனைகளும் இதன்போது வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பேச்சுவார்த்தையில் சட்ட மாஅதிபருடன் கடற்படைத் தளபதி, துறைமுக அதிகார சபையின் தலைவர், வர்த்தகக் கப்பலின் பணிப்பாளர், இராணுவத்தின் சுற்றாடல் பிரிவு அதிகாரிகளும் கலந்துகொண்டதாக சட்ட மாஅதிபரின் இணைப்புச் செயலாளர் நிஷாரா ஜயரத்ன தெரிவித்தார். அதே வேளை, அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ள நியூ டயமன்ட் எரிபொருள் கப்பலில் தீ பரவுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

தீ பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு கடற்படையினரின் அனர்த்த கட்டுப்பாட்டு பிரிவினர் மேற்கொண்ட முயற்சி வெற்றியடைந்துள்ள நிலையில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். 06

## பல பகுதிகளில் கடும் காற்றுடன் மழை; இயல்புநிலை பாதிப்பு



கொழும்பின் பல பகுதிகளிலும் நேற்று மாலை பலத்த காற்று வீசியது. இதனால் பம்பலப்பிட்டி டுப்ளிகேஷன் வீதியில் மரமொன்று பெயர்ந்து விழுந்திருப்பதைப் படத்தில் காணலாம். (படம்: எஸ்.பிரணவேஷ்)

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

நாட்டில் பல பகுதிகளில் நேற்று மாலை பலத்த காற்றுடன் பெய்த கடும் மழை காரணமாக கரையோரப் பகுதி மக்கள் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தனர். மேலும் சீரற்ற காலநிலை தொடரக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், மீனவர்கள் மறு அறிவித்தல்வரை கடலுக்குச் செல்ல வேண்டாமென கடற்றொழில் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

நாட்டின் 14 மாவட்டங்களில் கடும் மழை மற்றும் காற்றுடன் கூடிய வானிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று விடுத்திருந்த வானிலை அறிக்கையில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீ க்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும். நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும்.

நாடு முழுவதும் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 50 -60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் அதிகமாக 06

## அனைத்துப் பாடசாலைகளிலும் நாளை முதல் கல்வி நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பும்

கல்வி அமைச்சின் செயலாளர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**




கொரோனா வைரஸ் சூழ்நிலையால் மூடப்பட்ட நாட்டின் அனைத்துப் பாடசாலைகளிலும் நாளை 8ம் திகதி முதல் கல்வி நடவடிக்கைககள் வழமைக்குத் திரும்புவதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: கொரோனா 06

பிரதமர் விடுத்த கோரிக்கை;

## முட்டையின் விலை குறைக்கப்பட்டது

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையின் பிரகாரம் இன்று முதல் முட்டை விலையை இரண்டு ரூபாவால் குறைக்க அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கம் அறிவித்துள்ளது. 06

13 திருத்தம் இரத்து:

## முறியடிக்க நாம் முயற்சிப்போம்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



13 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்கும் துணிச்சல் அரசாங்கத்திற்கு இல்லை. இது ஒரு விளையாட்டுத்தமான விடயமல்ல. இருநாடுகளுக்கும் இடையில் அமைதியை ஏற்படுத்தும் வகையில் செய்துகொள்ளப்பட்டுள்ள 06

கிழக்கு கடலில் எரிந்த கப்பலால் சந்தேகம்;

## எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்ய பணிப்பு

துறைசார் அதிகாரிகளிடம் அமைச்சர் டக்ளஸ்



கல்முனை கடற் பிரதேசத்தில் ஆய்வுகளை மேற்கொண்டு எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு கடற்றொழில அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் துறைசார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 06

வித்யா கொலை வழக்கு விசாரணை;

## ஆணைக்குழுவில் ஆஜராக விஜயகலாவுக்கு அழைப்பு



அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 06

த.தே.ம.மு இளைஞர் அணியுடன் இணைந்து

## தனி வழியில் பயணிக்க மணிவண்ணன் தீர்மானம்



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளராக இருந்த சட்டத்தரணி மணிவண்ணன் தலைமையில் தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை என்ற அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

மணிவண்ணனை அமைப்பில் இருந்து நீக்குவதாக அண்மையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிவித்திருந்தார். 06

## தேசியப்பட்டியலுக்கு ரணிலே பொருத்தம்

அர்ஜுன ரணதுங்க சிபார்சு



ஐக்கிய தேசிய கட்சி தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே பொருத்தமானவர் என கட்சி முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க கூறியுள்ளார். இது தொடர்பில் கட்சியினுள் 06

## ஊவா பட்டதாரிகளுக்கு மாகாணத்திற்குள் தொழில்

செந்தில் தொண்டமான் கோரிக்கை



ஊவா மாகாணத்திலுள்ள பட்டதாரிகளுக்கு ஊவா மாகாணத்துக்குள்ளேயே அரசாங்க துறைகளில் தொழில் வாய்ப்பு வழங்குவதற்கு வழிசமைத்துகொடுக்குமாறு மாகாண தலைமை செயலாளரிடம், பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் 06

## இஸ்லாமிய கல்வி பாடத்திட்டத்தில் மாற்றம் செய்யப்படுதல் அவசியம்

முஸ்லிம் மத விவகார திணைக்கள பணிப்பாளர் அஷ்ரப்

**நமது நிருபர்**



இஸ்லாமிய கல்விப் பாடத்திட்டத்தில் மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று முஸ்லிம் மத அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆதம்பாவா முகம்மது அஷ்ரப் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக சாட்சியமளித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்துக் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். 06

அற்ப சலுகைகளுக்காக

## தன்மானத்தை இழக்க நாங்கள் தயாரில்லை

**அட்டாளைச்சேனை குறூப், அக்கரைப்பற்று மேற்கு நிருபர்கள்**



சலுகைகள் பெறுவதோ, அமைச்சுப் பதவிகள் பெறுவதோ எமது நோக்கல்ல. ஒரு திடமான சக்திமிக்க அரசு ஒன்றை தோற்றுவிப்பதன் மூலம் நாட்டை சுபீட்சப் பாதைக்கு கொண்டு செல்வதே எமது 06



புதிய எம்.பி ஐயா சாவைக் கண்டு அஞ்சப் போவதில்லையாம்.... உண்மையிலேயே துணிச்சலான மனுசன்தான் அப்பா...
ஐயோ கடவுளே, அவருக்கு அச்சமில்லை–தான், வயசும் போட்டுது, பிரச்சினை எண்டு வந்தால் கொழும்பில போய் வீட்டில பாது–காப்பா தங்கிவிடுவார்... இங்க சனத்துக்–கெல்லோ பிரச்சனை!!

## கப்பல் தீ விபத்தை ஆராய்வதற்கு இலங்கை வந்தது விசேட குழு

நேரில் சென்று ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிடும்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

எம்.ரி நியூ டயமன்ட் கப்பலில் ஏற்பட்ட திடீர் தீ விபத்துக்கான காரணத்தை கண்டறிய விசேட நிபுணர் குழுவொன்று இலங்கைக்கு வந்துள்ளதாக கடற்படைப் பேச்சாளர் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

பிரிட்டிஷ் மற்றும் நெதர்லாந்து நாடுகளைச் 06




படங்கள்: பாறுக் ஷிஹான்

## 32 இலட்சம் பெறுமதியான 800 கிலோ மஞ்சளை கைப்பற்றிய கடற்படையினர்

இந்தியாவிலிருந்து கடத்திய மூன்று சந்தேகநபர்களும் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக கொண்டுவரப்பட்டதாக கருதப்படும் 32 இலட்சம் ரூபா பெறுமதியான 800 கிலோ மஞ்சளை கல்பிட்டி பிரதேசத்தில் வைத்து கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.


மேற்படி மஞ்சள் பொதிகளை கொண்டு செல்வதற்காக லொறியில் ஏற்றப்பட்ட நிலையில் கடற்படையினர் கைப்பற்றியுள்ளதுடன் மூன்று சந்தேகநபர்களையும் கைதுசெய்துள்ளனர். அவர்கள் நேற்று கல்பிட்டி பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் கல்பிட்டி பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கல்பிட்டி கடற்படை முகாம் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த 06

# மத்திய சுகாதார சேவை கட்டமைப்பின் அவசியத்தை உணர்த்திய கொவிட்-19





கொவிட் – 19 நோய்த் தொற்று எமக்கு கற்றுத் தருகின்ற இன்னுமொரு பாடமாக அமைவது மத்திய சுகாதார சேவை கட்டமைப்பொன்றை நடைமுறைப்படுத்தி வருவதன் முக்கியத்துவத்தை ஆகும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். சுகாதார சேவை முழுமையாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்தால் நோய்த் தொற்றுக்கு இலங்கை முகங்கொடுக்கும்போது அதன் செயற்திறன் இதற்கு மாற்றமாக அமைந்திருக்கலாம்.

“2020 சிறந்த உள்வாரி வதிவிடப்பயிற்சி நெறி” “Good Intern Programme 2020” நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர்,எமது சமுதாயத்தில் வைத்தியர்கள் மற்றும் சுகாதார சேவையாளர்களின் முக்கியத்துவம் தற்போது உலகம் பூராகவும் பரவி வருகின்ற கொவிட் –19 தொற்று நோயின் காரணமாக பரந்தளவு அவதானத்திற்குட்பட்டுள்ளது.

இலங்கை இந்நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டிருப்பது மிக முக்கியமாக அரசாங்கம் பல்வேறு பிரிவுகளில் மேற்கொண்ட தீர்மானங்கள் மற்றும் உடனடி நடவடிக்கைகள் உள்ளிட்ட எமது சுகாதார தொழில் வல்லுனர்களின் உண்மையான அர்ப்பணிப்பின் காரணமாகவேயாகும்.

எமது வைத்தியசாலைகள், இரசாயன கூடங்கள், தனிமைப்படுத்தல் நிலையங்கள் மற்றும் சமூகமட்டத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள வைத்தியர்கள், தாதிகள் பொதுசுகாதார பரிசோதகர்கள், தொழிநுட்பவியலாளர்கள் மற்றும் மேலும் பல்வேறு வகையில் சேவையில் ஈடுபட்டவர்கள் எமது இராணுவத்தின் செயற்திறனான பங்களிப்புடன் இவ் வைரஸ் பரவுவதை தடுப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. இம்முயற்சியில் இலங்கை குறிப்பிடத்தக்களவு வெற்றியை அடைந்துகொண்டமை உலகில் பல்வேறு அபிவிருத்தியடைந்த நாடுகளும்கூட நோய்த்தொற்றிலிருந்து பாதுகாப்பு பெற முடியாத சந்தர்ப்பத்திலேயாகும்.

அந்நாடுகள் தாமதித்து அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் தொடக்கம் சிறந்த சுகாதார பாதுகாப்பின்மை, அந்நாடுகளில் சுகாதார சேவை நிறுவனங்கள் முன்னரே தயார் நிலையில் இருக்காமை, போதுமானளவு பரிசோதனைகள் செய்யாமை, நிர்வாகத்துறை கட்டமைப்பு போதியளவில் காணப்படாமை வரை பல்வேறு காரணங்களினால் வைரஸ் பரவுவதை தடுப்பதற்கு அதிகளவிலான அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு முடியாதுள்ளது.

பல்வேறு நாடுகளில் வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளிகளை வைத்தியசாலைகளில் பொறுப்பேற்காமல் நோயாளிகள் தம்மை தாமே கவனித்துகொள்ள வேண்டிய நிலை தோன்றியது. சிலபோது போதுமானளவு சிகிச்சைகள் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக சமூக மட்டத்தில் நோய் மிக வேகமாக பரவியதுடன், இறுதியில் இந்நாடுகளில் தொற்றுக்குள்ளானவர்கள் மற்றும் மரணித்தவர்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்துள்ளது.

இந்நிலையினால் கொவிட் 19 தொற்றினால் பாதிக்கப்பட்ட அந்நாட்டினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, எமது இலவச சுகாதார கட்டமைப்பின் காரணமாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக இருந்தாலும் இலங்கை இப்பிரச்சினைக்கு மிகவும் சிறந்த வழிமுறையினூடாக முகங்கொடுத்ததாக மிகவும் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கொவிட் 19 தொற்று உள்ளாகி இருக்கலாம் என்று சந்தேகித்த எந்தவொரு நோயாளியும் எமது சுகாதார சேவையினால் திருப்பி அனுப்பப்படவில்லை.

அனைத்து நோயாளர்களுக்கும் அரசாங்கத்தினால் எமது அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சை அளிக்கப்படுவதோடு, நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்ட நோயாளிகள் 3110 பேரில் இதுவரை 2088 பேர் சுகமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதுவரை 12 மரணங்களே நிகழ்ந்துள்ளது.

குறுகிய காலத்திற்குள் எம்மால் ஸ்தாபிக்க முடியுமாக இருந்த பலமான பரிசோதனை பொறிமுறை சந்தேகத்திற்கிடமான நோய் அறிகுறிகள் உள்ள நோயாளர்களை இனங்கண்டு அவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சையளித்து உறுதி செய்ததன் மூலம் இம்முயற்சிக்கு பங்களித்தனர். வைரஸ் மிக வேகமாக பரவி வருகின்ற நாடுகளிலிருந்தும் நாம் எமது 1000த்திற்கும் மேற்பட்ட பிரஜைகளை திருப்பி அழைத்து வந்தோம். அவ்வாறு திரும்பி வருபவர்கள் நாடு பூராகவும் உள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்வாங்கப்படுவதுடன். அவர்களை எமது இராணுவத்தினர் மிகச் சிறப்பாக கவனித்து பாதுகாத்து வந்தனர். இந்நிலையங்கள் முழுமையாக அரசாங்கத்தின் மூலமே நிர்வகிக்கப்படுகின்றது. இவை அனைத்தையும் எவ்வாறு நோக்கினாலும் குறிப்பிடத்தக்களவு பாரிய வெற்றியாகும்.

கொவிட் 19 நோய்த் தொற்றினை கட்டுப்படுத்துவதில் இலங்கை பெற்ற வெற்றி உலக சுகாதார அமைப்பு மற்றும் யுனிசெப் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்கள், பல்வேறு நாடுகள் உள்ளிட்ட தனிப்பட்ட பலரும் பாராட்டியிருப்பது இவ்வெற்றியின் காரணமாகவேயாகும்.

கொவிட் – 19 நோய்த் தொற்றை கட்டுப்படுத்தியதன் மூலம் இலங்கையின் பொது சுகாதார சேவை கட்டமைப்பின் பலம் எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறான நிலையின் போது எமது நாட்டில் பலர் வெளிவாரியான சுகாதார சேவையை எதிர்பார்க்கும் நோக்கம் என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கொவிட் – 19 நோய்த் தொற்று எமக்கு கற்றுத் தருகின்ற இன்னுமொரு பாடமாக அமைவது மத்திய சுகாதார சேவை கட்டமைப்பொன்றை நடைமுறைப்படுத்தி வருவதன் முக்கியத்துவத்தை ஆகும். இலங்கையில் பல்வேறு வைத்தியசாலைகள் மாகாண சபையினால் நிர்வகிக்கப்பட்டு வந்தாலும் அதிர்ஷ்டவசமாக நோய்த் தொற்றின் உச்ச சந்தர்ப்பத்தில் சிக்கல் எதுவும் இன்றி பயன்படுத்தக் கூடிய வகையில் நாடு பூராவும் பல்வேறு வைத்தியசாலைகள் சுகாதார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

நாம் முகங்கொடுக்கும் சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்களை உண்மையாக புரிந்து கொள்ளல் மற்றும் அவற்றுக்கான எமது செயற்பாடுகளை உரிய முறையில் திட்டமிடுவது தேசம் என்ற வகையில் எமக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இற்றைக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலில் மக்கள் அரசாங்கத்திற்கு வழங்கிய ஆணையின் மூலம் இலங்கை மக்கள் அபிவிருத்தி தொடர்பாக மிக எதிர்பார்ப்புடன் இருப்பதும் அந்நடவடிக்கைகளுக்கு பல்வேறு நியாயங்களை கூறுவதன் மூலம் விரக்தியடைந்த நிலையில் இருப்பதையுமே தெளிவாகக் காட்டுகின்றது.

சுகாதார வசதிகளை பெற்றுக் கொள்ள முடியாத மிகவும் பின்தங்கிய கிராமங்களில் வசிக்கின்ற மக்களுக்கு அவசியமான முதன்மையான சுகாதார வசதிகளை வழங்குவது பொது சுகாதார தாதிமார்களாலேயே முடியும். போதுமான பயிற்சிகள், தகுதிகள் உள்ள தாதிகளுக்கு சிறியளவிலான நோய்களை இனங் காண்பதற்காக மக்களுக்கு உதவிகளை செய்ய முடிவதோடு, வைத்திய ஆலோசனை தேவைப்படும் பட்சத்தில் அவற்றுக்காக அவர்களை அனுப்பி வைக்கவும் அவர்களுக்கு முடியும் என்றார்.





பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் கதிர்காமம் கந்தன் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். இதில் அமைச்சர்களும் பங்கேற்றார்கள்.







பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் மாத்தறை மரியாள் தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவில் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் ஆளும் தரப்பு எதிர்த்தரப்பு எம்.பிகளும் கலந்து கொண்டார்கள்.

2020 செப்டெம்பர் 7 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

05ஆம் திகதி முதல் 08ஆம் திகதி வரை

**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.47 |
| லுஹர் | 12.11 |
| அஸர் | 03.13 |
| மஃரிப் | 06.16 |
| இஷா | 07.27 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் ஆவணி 22

ராகுகாலம் : காலை : 7.30 - 9.00வரை
சுபநேரம் : மாலை : 6.00 - 7.30வரை
யோகம்: சித்த யோகம்
நட்சத்திரம்: பரணி முழுவதும்
திதி: பஞ்சமி

தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk



உள்நாட்டு உப்பு உற்பத்தி தொடர்பில் மாந்தை உப்பு உற்பத்தி நிறுவனத்தின் தலைவர் உட்பட அதிகாரிகளுக்கும் அமைச்சர் விமல் வீரவங்சவிற்கும் இடையில் அமைச்சில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் பிடிக்கப்பட்ட படம்



ஸ்கோப் சினிமாஸ் ஏற்பாட்டின் கீழ் திரைப்பட விழாவொன்று தற்போது லிபர்ட்டி திரையரங்கில் நடைபெற்று வருகின்றது. லேக்ஹவுஸின் சினிமா சஞ்சிகையான சரசவிய இத்திரைப்பட விழாவுக்கு அனுசரணை வழங்கியுள்ளது. இத்திரைப்படத்தின் ஆரம்ப நிகழ்வின்போது அரச திரைப்பட கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜயந்த தர்மதாசவும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி பி. தயாரத்னவும் அளவளாவிக் கொண்டிருப்பதைப் படத்தில் காண்க. (படம்: துஷார பெர்னாண்டோ)

## எனக்கு எதிராக குரல் எழுகையில் மௌனம் காக்கும் தமிழ் பிரதிநிதிகள்

### சீ.வி.விக்னேஸ்வரன் எம்.பி விசனம்



பாராளுமன்றத்தில் தனக்கெதிராக குரல் எழுப்பப்படுகையில் தமிழ் பிரதிநிதிகள் மௌனம் காப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பாக முதல் தடவையாக கிளிநொச்சியில் மக்கள் சந்திப்பை நடத்திய அவர், மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் எனக்கு எதிர்ப்பு வருகின்றபோது எமது தமிழ் பிரதிநிதிகள் பலர் மௌனிகளாக இருக்கின்றார்கள். நான் பேசுவது அவர்களுக்காகவும் தான் என்பதை மறந்து விட்டார்கள்.

உலகின் மூத்த மொழி, செம்மொழி தமிழ் என்பது இந்தியாவில் மாத்திரமன்றி உலகம் முழுவதிலும் ஏற்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடியும் இதனைக் கூறியுள்ளார். ஆனால், தென்னிலங்கையில் இருப்பவர்களுக்கு அது தெரியவில்லையா? தெரியாததைப் போல் நடிக்கின்றார்கள் என்றே நினைக்கின்றேன். நான் அன்று, தமிழ் உலகில் மூத்த மொழி, தமிழர்கள் இந்த நாட்டின் மூத்த குடிகள் என்று சொன்னேன். தமிழர்கள் இந்த நாட்டிலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு 06

# நாட்டு நலனுக்காகவே 20; ஒத்துழைப்பது எமது கடமை

### சபாநாயகர் மஹிந்த யாப்பா



நாட்டுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடே 20ஆவது திருத்தச் சட்டமூலம். இதனை சகலரதும் ஒத்துழைப்புடன் மேற்கொள்ள வேண்டும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

20ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பாக நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மேலும் கூறியுள்ளதாவது,

"20 ஆவது திருத்தச்சட்டமூலத்தை அனைவரது ஒத்துழைப்புடன்தான் நாம் நிறைவேற்ற வேண்டும்.

இதற்கு பாராளுமன்றில் அனைவரது ஒத்துழைப்பும் அவசியமாகும். இது நாட்டுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடு. இது ஒரு தரப்பை மட்டும் சார்ந்து இருக்கக்கூடாது. 19 ஆவது திருத்தச்சட்டத்தை நாம் தான் கடந்த அரசாங்கத்தின் போது கொண்டுவந்தோம். 06

**நாணயமாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

"அனைவருக்கும் வீடு" செயற்திட்டம்

## அங்கஜனால் இரண்டாம் கட்ட கொடுப்பனவு கையளிப்பு



'அனைவருக்கும் வீடு' என்ற செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடமைப்புக்கான உதவிகளை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 113 குடும்பங்களுக்கு, 0.6 மில்லியன் ரூபாய் பெறுமதியான வீடுகளை நிர்மாணிப்பதற்கான இரண்டாம் தவணை கொடுப்பனவு பயனாளிகளுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் இதற்கான நிகழ்வுகள் யாழ் மாவட்ட செயலகத்தில் (06) நேற்று காலை இடம்பெற்றது. 06

## சூரியன் இன்று மதியம் 12.08 மணிக்கு சில பகுதிகளில் உச்சம் கொடுக்கும்

**மர்லின் மரிக்கார்**

சூரியன் இன்று திங்கட்கிழமை மதியம் 12.08 மணிக்கு கிந்தொட்டை, கல்வெலவத்த, கல்லேல்ல, அத்துரலிய கஹந்தமோதர ஆகிய பிரதேசங்களுக்கு நேரே உச்சம் கொடுக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரியொருவர் நேற்று தெரிவித்தார்.

இவ்வருடம் இலங்கைக்கு நேரே சூரியன் உச்சம் கொடுக்கும் இறுதி நாளே இன்று என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வதிகாரி மேலும் குறிப்பிடுகையில், சூரியன் வருடத்திற்கு இரண்டு காலப்பகுதியில் இலங்கைக்கு நேரே உச்சம் கொடுக்கும். அவற்றில் ஒன்று ஏப்ரல் மாத முற்பகுதியில் இடம்பெறும். மற்றையது ஆகஸ்ட் பிற்பகுதியிலும் செப்டம்பர் முதல் வாரத்திலும் நிகழும். ஒவ்வொரு வருடமும் முதற்பகுதியில் சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பயணிக்கும். அவ்வாறு பயணிக்கும் போது தான் ஏப்ரல் மாதம் முற்பகுதியில் இலங்கைக்கு நேரே உச்சம் கொடுக்கின்றது. அந்த வகையில் இவ்வருடம் ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரையும் உச்சம் கொடுத்தது.

வருடத்தின் பிற்பகுதியில் இச்சூரியன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி பயணிக்கும். அந்த வகையில் கடந்த ஆகஸ்ட் 28 ஆம் திகதி முதல் 06

## தோட்ட அதிகாரியை இடமாற்றம் செய்ய கோரி போராட்டம்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

தலவாக்கலை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட வட்டக்கொடை தோட்ட பிரிவுகளான யொக்ஸ் போட், வட்டக்கொடை கீழ்பிரிவு, வட்டக்கொடை மேற்பிரிவு தோட்ட தொழிலாளர்கள் அத்தோட்ட அதிகாரியை இடமாற்றம் செய்ய கோரி கடந்த சனிக்கிழமை வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று அத்தோட்ட தேயிலை தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளி ஒருவரை அத்தோட்ட அதிகாரி தாக்க முற்பட்டதாக அத்தொழிலாளி, அதிகாரி மீது குற்றம் சுமத்தியுள்ளார். இதனை தொடர்ந்து அத்தோட்டத்தைச் சேர்ந்த 500 ற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் 06

## 19 ஆவது திருத்தத்தை ஒழிக்க மக்கள் ஆணை வழங்கப்படவில்லை



19ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாது செய்ய வேண்டும் என மக்கள் இந்த அரசாங்கத்துக்கு ஆணை வழங்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார். 20 ஆவது திருத்தம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர், மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்ரமசிங்கவும் செய்த முட்டாள் தனமான செயற்பாடுகளினால்தான் இந்த நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். அதனாலே எமது ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று மக்கள் கோரினார்கள் எனவும் அவர் கூறினார்.

## தேசிய உப்புத் தேவையை இறக்குமதியின்றி பூர்த்திசெய்வதே அரசாங்கத்தின் இலக்கு



**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

அரசுக்குச் சொந்தமான மாந்தை உப்பு உற்பத்தி நிறுவனத்தில் உப்பு உற்பத்தியை அதிகரித்து இறக்குமதி இல்லாது தேசிய உப்பு தேவையை முழுமையாக உள்நாட்டு உற்பத்தியின் மூலம் பூர்த்தி செய்வதே அரசாங்கத்தின் அடுத்த ஐந்தாண்டு இலக்காகும் என கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

மாந்தை உப்பு உற்பத்தி நிறுவனத்தின் தலைவர் உட்பட அதிகாரிகளுடன் அமைச்சர் நடத்திய சந்திப்பின் போது இவ்வாறு கூறியுள்ளார்.

மாந்தை உப்பு உற்பத்தி நிறுவனத்தில் வருடத்திற்கு 21,000ம் மெட்ரிக் தொன் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இதனை மேலும் அதிகரித்து இறக்குமதிகளின் தேசிய உப்பு தேவையை பூர்த்திசெய்ய வேண்டும். இதற்காக உயர் தொழில்நுட்பத்தை உள்வாங்கி பல்கலைக்கழகத்தின் ஒரு குழுவை இணைத்துக் கொண்டு உப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என அமைச்சர் விமல் வீரவங்ச இந்தச் சந்திப்பில் வலியுறுத்தினார். எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்குள் நாட்டின் மொத்த உப்புத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மாந்தை உப்பு உற்பத்தி நிறுவனத்தை கட்டியெழுப்ப வேண்டும் எனவும் அமைச்சர் இதன்போது அதிகாரிகளுக்கு விளக்கமளித்தார்.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பேருவளைக்கான பிரதான காரியாலயமும் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் உத்தியோகபூர்வ அலுவலகமும் சீனன்கோட்டையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், இரத்தினக்கல் வர்த்தகர் முஹம்மட் சாலியுடன் இணைந்து அலுவலகத்தை திறந்து வைப்பதை படத்தில் காணலாம்.

## கொரோனாவிலிருந்து 7 பேர் குணமடைவு

ஏழு பேர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, வைரஸ் தொற்றிலிருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்து 925ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை வைரஸ் தொற்று கண்டறியப்பட்ட மூவாயிரத்து 121பேரில் இன்னும் 184 பேர் தொடர்ந்து வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கொரோனா தொற்று சந்தேகத்தின்பேரில் 57 பேர் வைத்தியக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். 06

## யாழில் மோட்டார் சைக்கிள் விபத்தில் ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் பலி

**ஜெகதீஸ்**

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை மூன்று மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதன்போது அல்வாய் பகுதியை சேர்ந்த 65 வயதான மகாலிங்கம் வின்சன் கோமகன் என்பவரே உயிரிழந்தார். இவர் கணிதபாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக பணியாற்றி தற்போது ஓய்வுநிலையில் இருந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்கு நேர் மோதியே இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கோப்பாய் பொலிசார் தெரிவித்தனர்.

மதுபானத்திற்குள் தண்ணீர் கலந்து மோசடி

## சுங்க அதிகாரிகள் மூவர் கைதாகி விளக்கமறியல்



**மொறட்டுவ மத்திய விசேட நிருபர்**

வெளிநாட்டிலிந்து மதுபானம் இறக்குமதி செய்து அதை மீள் ஏற்றுமதி செய்யும் சுங்க தீர்வையற்ற திட்டத்தின் கீழ், மோசடி செய்த சுங்க பரிசோதகர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஸ்ரீலங்கா சுங்கத்திணைக்களத்தின் பிரதான பரிசோதகரான பாணந்துறை, கொரகாபொல குமாரதுங்க முனிதாஸ மாவத்தையை சேர்ந்த ரணவக்க ஆரச்சிகே காமினி பெரேரா, சுங்க திணைக்களத்தின் பரிசோதகர்களான கந்தான, நாகொட பியனம மாவத்தையை சேர்ந்த மாபலகம ஆரச்சிகே நிஷாந்த லக்சிரி, களுத்துறை, நாகொட, மூன்றாம் ஒழுங்கை கே.பி. கசுன் கயத்ரி பதிரகே ஆகிய மூவருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 06

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் ஆவணி மாதம் 22ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 முஹர்ரம் பிறை 18

## குறள் தரும் சிந்தனை



மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்பு உடையவளாகித் தன் கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்க வாழ்க்கை நடத்துகிறவளேவாழ்க்கைத்துணை ஆவாள்.

## வடபகுதியில் அதிகரிக்கும் போதைப் பொருள் பாவனை

நாட்டின் வடபகுதியில் போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான நிலையமொன்று அமைக்கப்பட வேண்டுமென்று யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் த. சத்தியமூர்த்தி அரசாங்கத்துக்குஆலோசனையொன்றை முன்வைத்திருக்கின்றார்.

'போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை நாம் அலட்சியமாக கைவிட்டு விட முடியாது. அவர்களை அப்பழக்கத்திலிருந்து மீட்டெடுத்து சமூகத்துடன் இணைத்துக் கொள்வது அவசியம். எனவே வடபகுதியில் போதைப் பொருள் புனர்வாழ்வு நிலையமொன்று அமைக்கப்பட வேண்டும்' என்று சுட்டிகாட்டியுள்ளார் மருத்துவர் சத்தியமூர்த்தி.

கடந்த சில வருடங்களாக நாட்டின் வடபகுதியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவது வெளிப்படையான உண்மையாகும். இது தொடர்பாக ஊடகங்களில் செய்திகள் அடிக்கடி வந்த வண்ணமுள்ளன. கஞ்சா, ஹெரோயின், ஐஸ் என்ற போதை வஸ்து மற்றும் கசிப்பு பாவனை என்றெல்லாம் வடபகுதியில் சமூக சீர்கேடுகள் கடந்த சில வருடங்களாக அதிகரித்து விட்டன.

குறிப்பாக இளவயதினர் மத்தியிலேயே போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவது கண்டறியப்பட்டுள்ளது. மாணவர்களிலும் பெருமளவானோர் இப்பழக்கத்துக்கு அடிமையாகி விட்டதாக தெரிய வந்திருக்கிறது. ஐஸ் போன்ற போதைப்பொருட்களை மாணவர்களுக்கு விற்பனை செய்வதில் சில சமூகவிரோதக் குழுக்கள் ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் வெளிவருகின்றன.

இவ்வாறான நிலைமையை இனிமேலும் தொடர்வதற்கு அனுமதித்தால் வடபகுதியானது குற்றவாளிகளும் போதைப்பொருளுக்கு அடிமையானோரும் நிறைந்த இடமாகி விடக் கூடும். எனவே வடக்கில் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகின்றன.

நீண்ட தூர போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற பஸ்களின் சாரதிகள் 'ஐஸ்' என்ற போதைப் பொருளைப் பயன்படுத்துவது தெரியவந்துள்ளதாக அதிர்ச்சியூட்டும் தகவலொன்றையும் வெளியிட்டுள்ளார் டொக்டர் சத்தியமூர்த்தி. இது மிகவும் பாரதூரமான நிலைமையாகும்.

தனிமனிதன் ஒருவனின் போதைப்பொருள் பாவனை காரணமாக பஸ்ஸில் பயணம் செய்கின்ற அத்தனை பயணிகளினதும் உயிருக்கு ஆபத்து விளைவதற்கும் இடமிருக்கிறது. வடபகுதியில் பேதைப்பொருள் பாவனையானது எத்தனை மோசமான நிலைமைக்குச் சென்று விட்டதென்பதை இப்போது புரிந்து கொள்ள முடிகின்றது.

போதைப்பொருள் பாவனைக்கு நன்கு அடிமையான ஒருவரை அப்பழக்கத்தில் இருந்து மீட்டெடுப்பதன்பது இலகுவான காரியமல்ல. அவ்வாறான ஒருவரை சாதாரண மனிதராக மாற்றுவதாயின் அதற்கு நீண்ட கால சிகிச்சையும், உளரீதியிலான ஆற்றுப்படுத்தலும் அவசியமாகின்றன. தற்போது கொரோனா அச்சுறுத்தல் நிலவுகின்ற காலமாகும். வடபகுதியில் இருந்து போதைப்பொருள பாவனையாளர்களை புனர்வாழ்வுக்காக தென்னிலங்கைக்கு அழைத்துச் செல்வதில் சிரமங்கள் நிலவுகின்றன.

எனவே வடக்கில் போதைப்பொருள் பாவனையாளர்களுக்கான புனர்வாழ்வு நிலையமொன்று அமைக்கப்படுமானால் இவர்களுக்கு சிகிச்சையும் புனர்வாழ்வும் அளிப்பது இலகுவான காரியமாகி விடும். எனவே புனர்வாழ்வு நிலையமொன்றை அங்கு அமைப்பதில் கவனம் செலுத்துவது அவிசியமாகின்றது.

அதேசமயம், இந்தியாவிலிருந்து வடபகுதிக்கு கேரள கஞ்சா கடத்தி வரப்படும் சட்டவிரோத செயற்பாடுகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு கேரள கஞ்சா மற்றும் போதைப்பொருட்களைக் கடத்துவதற்கு சமூகவிரோதிகள வடக்கை தளமாகப் பயன்படுத்துகின்றனரோ என்ற சந்தேகம் இங்கே எழுகின்றது.

யுத்தம் நிலவிய காலப் பகுதியில் வடக்கு கடற் பகுதியில் கடற்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் எந்நேரமும் தீவிரமாக இருந்ததன் காரணமாக கடல் மார்க்கமாக வடபகுதிக்கு போதைப்பொருளைக் கடத்தி வருவதென்பது கடினமான காரியமாக இருந்தது. இன்று நிலைமை அவ்வாறு இல்லை. யுத்தம் முடிவடைந்து விட்டதால் வடபகுதி கடற் பிராந்தியத்தில் முன்னரை விட பாதுகாப்பு நடவடிக்கைகள் குறைவாகவே உள்ளன. இவ்வாறான நிலைமையை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தியவாறு போதைப் பொருள் கடத்தல்காரர்கள் தங்களது கைவரிசையைக் காட்ட முற்படுவது தெரிகின்றது.

எனவே வடபகுதி கடற் பிரதேசத்தில் படையினரின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்படுவது அவசியமாகின்றது. போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானோருக்கு புனர்வாழ்வு அளிப்பதால் மாத்திரம் வடக்கில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட முடியாது.

வடபகுதிக்குள் போதைப்பொருள் கடத்தி, வரப்படுகின்ற அத்தனை மார்க்கங்களையும் கண்டறிந்து தடை செய்வது அவசியம். அப்போதுதான் வடக்குக்குள் போதைப் பொருளின் ஊடுருவலைத் தடுத்து நிறுத்த முடியும். பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர் மாத்திரமன்றி, வடபகுதி சமூகத்தின் அத்தனை தரப்பினரும் போதைப்பொருள் ஒழிப்புக்கான பணயில் கைகோர்ப்பது அசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

# உள்ளூர் மக்களுக்கான வாழ்வாதாரத்தை வழங்கும் சமூகம் சார்ந்த சுற்றுலா திட்டம்

## மட்டக்களப்பு நாசிவன்தீவு கிராமத்தில் சேவா லங்கா மன்றத்தினால் ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராம மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் சேவா லங்கா மன்றத்தினால் சமூகம் சார்ந்த சுற்றுலாத்துறையினை ஆரம்பிக்கும் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நாசிவன் தீவு கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சமூகம் சார்ந்த சுற்றுலாத்துறை வேலைத் திட்டம் சமீபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சேவா லங்கா மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் ஜே.சாய்ராஜன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சேவா லங்கா மன்றத்தின் சுற்றுலாத்துறை திட்ட இணைப்பாளர் ஏ.எம்.பாஹிம், சேவா லங்கா மன்றத்தின் பிரதிநிதிகள், நாசிவன்தீவு கிராம சுற்றுலாக் குழுவினர், திருகோணமலை அகம் நிறுவனத்தினர், மீன்பிடித் தொழிலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கிராம மக்களின் சார்ந்த சுற்றுலாத்துறையினை மேம்படுத்தும் நோக்கிலான வேலைத் திட்டமானது சேவா லங்கா மன்றத்தினால் அவுஸ்ரேலியா அரசாங்கம் மற்றும் அவுஸ்ரேலியா எஸ்4 ஐ.ஜி நிறுவனத்தின் நிதி உதவி மூலம் இடம்பெற்று வருகின்றது.

இதன் போது ஆரம்ப வேலைத் திட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு ஆற்றில் மீன்பிடிக்கும் முறை பற்றி செயன்முறையில் காண்பிக்கப்பட்டதுடன் நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் திட்டம் தொடர்பிலான விளக்கமும் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பதினொரு இடங்களில் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலான சமூக சுற்றுலாத் துறை வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் ஒன்றாகவே நாசீவன்தீவு வாவிக்கரை தீவில் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் மூலம் நாசிவன்தீவு கிராமத்திற்கு வரும் உல்லாசப் பயணிகள் நாசீவன்தீவு கிராம மக்களின் வாழ்வாதாரத் தொழிலான மீன்பிடித் தொழிலை எவ்வாறு நாசீவன்தீவு ஆற்றில் மேற்கொள்கின்றனர் என்பதை நேரடியாக தோணி மற்றும் படகு மூலம் ஆற்றில் சென்று பார்வையிட முடியும். கொரோனா காரணமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை தடைப்பட்டுள்ள போதிலும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்க முடியும்.

அத்தோடு மட்டக்களப்பு மாவட்டத்தில் நாசீவன்தீவு ஆற்றில் மட்டியிலேயே பெரிய இன மட்டியான 'கவ்வாட்டி' அதிகமாக காணப்படுகின்றது. அத்தோடு நண்டு, மீன் என்பவற்றைப் பிடிக்கும் முறைகளையும் நேரடியாக பார்வையிட முடியும்.

மேலும் பார்வையிடும் போது பிடிக்கப்படும் மீன் வகைகள், நண்டு, கவ்வாட்டி, மட்டி என்பவற்றை கிராம மக்களோடு சேர்ந்து குறித்த பகுதியில் காணப்படும் தீவில் கிராமிய முறைப்படி சமைத்து சுற்றுலாப் பயணிகள் உண்ணக் கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.







எனவே நாசீவன்தீவு பிரதேசத்திற்கு வருகை தரும் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் குறித்த சேவையைப் பெறும் பட்சத்தில் இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்து பலருக்கு தொழில் வாய்ப்புக் கிடைக்கும். கிராமத்தினை அபிவிருத்தி செய்யயும் முடியும் என்று சேவா லங்கா மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட சுற்றுலாத்துறை திட்ட இணைப்பாளர் ஏ.எம்.பாஹிம் தெரிவித்தார்.



சேவா லங்கா மன்றத்தினால் அவுஸ்ரேலியா அரசாங்கம் மற்றும் அவுஸ்ரேலியா எஸ்4 ஐ.ஜி நிறுவனத்தின் நிதி உதவி மூலம் நாசீவந்தீவு கிராம மக்களின் வாழ்வாதார தொழிலான மீன்பிடி தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளும் சமூகம் சார்ந்த சுற்றுலாத்துறை திட்டத்திற்கு கிராம மக்கள் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றனர்.

நாசீவந்தீவு கிராமத்தில் மீன், நண்டு, மட்டி என்பன பிடிக்கப்படுகின்றன. இவற்றை சந்தைப்படுத்துவது குறைவாகக் காணப்படுகின்றது. தற்போது சமூகம் சார்ந்த சுற்றுலாத்துறை திட்டத்தின் மூலம் இங்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு இவற்றை சமைத்த உணவாக விற்பனை செய்வதற்கு கிராம மீனவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

"இங்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு எங்களால் ஆற்றில் எவ்வாறு மீன்கள் பிடிக்கப்படுகின்றன என்பதை கண்கூடாக பார்க்கும் வகையில் காண்பிப்போம். அத்தோடு ஆற்றில் இறங்கி கவ்வாட்டி, மட்டிகள் எவ்வாறு எடுப்பது என்றும் காண்பிக்கப்படும். பின்னர் இவை குறித்த பகுதியில் ஒதுக்கப்பட்ட தீவில் பாரம்பரிய முறையில் சமைத்து வழக்கப்படும்" என கிராம மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

"மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு இங்கு சுற்றுலா அம்சங்கள் குறைபாடாக உள்ளன. இதன் காரணமாக அவர்கள் சில நாட்களில் திருப்புவதாக எம் மீது ஒரு குற்றச்சாட்டு காணப்படுகிறது" என்று சேவா லங்கா மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் ஜே.சாய்ராஜன் தெரிவித்தார்.

"எமது மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகபட்ச வளங்கள் காணப்படுகின்றன. இதனால் இங்குள்ள வளங்களை பயன்படுத்தும் வகையில் சமூகம் சார்ந்த சுற்றுலாத்துறை திட்டத்தின் மூலம் உல்லாச பயணிகளை கவரும் வகையிலான வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அம்பந்தனாவெளி கிராமத்தில் தேன் எடுப்பதில் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய கூத்து, மதுரங்கேணிக்குளம் பகுதியில் வாழும் ஆதிவாசிகளின் வாழ்க்கைக் கோலம் பற்றியெல்லாம் அறிந்து கொள்ள முடியும்.

அத்தோடு குடும்பிமலை பிரதேசத்திற்கு வருகை தந்தால் மலையில் ஏறலாம், மலை சார்ந்த இடங்களைப் பார்வையிடலாம், அத்தோடு அங்கு கற்குகைகள் காணப்படுகின்றன. மட்டக்களப்பு நகர் வெட்டுக்காடு பகுதியில் பாரம்பரிய உணவுகள் உண்டு நடனங்களில் பங்கேற்க முடியும்.

பாலமுனையில் கைத்தறி நெசவு தொழிலைப் பார்வையிடலாம். புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பனை மற்றும் பிரம்பு தொழில் உற்பத்தி, கிரான்குளம் பிரதேசத்தில் நவம்பர் முதல் ஏப்ரல் வரை வெளிநாட்டு பறவைகள் வருகை போன்றவற்றைப் பார்வையிடலாம்.

எனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் வழக்கொழிந்து காணப்படும் இவ்வாறான விடயங்கள் உள்ளூர் மற்றும் வெளியூர் உல்லாசப் பயணிகளை சென்றடையும் வகையிலான ஏற்பாடுகளை சேவா லங்கா மன்றம் அவுஸ்ரேலியா அரசாங்கம் மற்றும் அவுஸ்ரேலியா எஸ்4 ஐஜி நிறுவனத்தின் நிதி உதவி மூலம் மேற்கொண்டு வருகின்றது" என்றார்சாய் ராஜன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் வாழ்வாதார தொழில்கள் மழுங்கடிக்கப்பட்டு வரும் நிலையில் சுற்றுலாத்துறை மூலம் மக்கள் வருமானம் பெற முடியும். அந்த வருமானத்தைக் கொண்டு அவர்கள் தங்களுடைய ஜீவனோபாயத்தை நடத்த முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வறிய நிலையில் காணப்படும் மக்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை உல்லாசப் பயணிகளுக்கு விற்பனை செய்து வருமானம் பெற முடியும். எனவே உள்நாட்டு உல்லாசப் பயணிகளின் வருகையை அதிகரிக்க உதவக் கூடிய வகையில் செய்றபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

எஸ்.எம்.எம்.முர்ஷித்
கல்குடா தினகரன் நிருபர்

# மரத் தளபாடங்களுக்குப் பதிலாக வீடுகளை ஆக்கிரமிக்கும் மாற்று செயற்கைப் பொருட்கள்

## மரங்கள் அழிக்கப்படுவது குறைகின்ற போதிலும் சூழலுக்கு பாதிப்பு அதிகம்

எமது நாட்டில் மரத் தளபாடங்களின் பாவனை படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றது.

வீட்டுத் தளபாடங்கள், யன்னல், கதவு, கூரை என பல்வேறு தேவைகளுக்கு எமது நாட்டு மக்கள் தற்போது மாற்றுப் பொருட்களை பாவிக்கத் தொடங்கியுள்ளனர்.

இது ஒரு நல்ல மாற்றமாகும். லொறி போன்ற வாகனங்களுக்கு அவற்றின் மேல் பகுதி முன்னரெல்லாம் மரத்திலேயே செய்யப்படுவது வழமை. ஆனால் இன்று இது முற்றாக மாறியுள்ளது.

இன்று வீட்டுக் கூரைகளுக்கும் தொழிற்சாலை கட்டுமானங்களுக்கும் அலுமினியம், கண்ணாடி இழை போன்றவற்றை பயன்படுத்துகின்றனர். அடுக்குமாடி தொழிற்சாலைகள் குறிப்பாக தேயிலை தொழிற்சாலைகள் அமைப்புக்கு கூட இவ்வாறான மாற்றுப் பொருட்களை பயன்படுத்துகின்றனர்.

குளியலறை, மலசல கூடங்கள் என்பவற்றுக்கும இன்று மரங்கள் பயன்படுத்தப் படுவதில்லை.

வீட்டுப் பாவளைப் பொருட்களான கதிரை, மேசை, கட்டில், அலுமாரி, இறாக்கை, புத்தக மற்றும் கணனி தளபாடங்களுக்கும் இன்று பிளாஸ்டிக் பொருட்கள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. சமையலறையில் உள்ள மரஅகப்பைகள் கூட இன்று மாறி விட்டன.



இவ்வாறு மரப் பொருட்களின் பாவனை குறைவதால் மரங்கள் அழிவடைவது குறைவடைந்து சூழல் பாதுகாக்கப்படுகின்றது. காடுகள் அழிக்கப்படுவது குறைவடைவதால் மண்ணரிப்பு ஏற்படாது நிலம் பாதுகாக்கப்படுகின்றது. வளியில் காபனீரொட்சைட் குறைந்து ஒட்சிசனின் அளவு அதிகரித்து மனிதவாழ்வுக்கும் ஏனைய உயிர்வாழ்விக்கும் ஏற்ற சூழல் ஏற்படுகின்றது. வளிமண்டலம் வெப்பமடைவது குறைகின்றது.



மறுபுறத்தில் மரத்தளபாட உற்பத்தியாளர்கள், மரங்கள் தொடர்பான தொழில் துறையில் ஈடுபட்டு வருபவர்கள் தொழிலை இழந்து வருகின்றனர். மரப் பொருட்கள் விற்பனை குறைவால் நாட்டில் பல பகுதிகளில் மரஆலைகள் மூடப்பட்டுள்ளன. அதேசமயம் பைபர், எலாஸ்டிக், இறப்பர் போன்ற பொருட்களால் செய்யப்பட்டவற்றைப் பயன்படுத்தும் போது இவற்றின் பாவனைக் காலம் எல்லையுடையது. காலம் முடிந்ததும் அவை பாவிக்க முடியாத அளவில் பழுதடைந்து விடும்.

இவை உக்கிப் போவதில்லை இவற்றை மீள்பாவனைக்கு உட்படுத்த முறையான வேலைத் திட்டம் எமது நாட்டில் மிகக் குறைவு.

இவற்றை அழித்தொழிக்க எரியூட்டுகின்றனர். இதனால் மரங்களை வெட்டுவதால் ஏற்படும் தீமையை விட பல மடங்கு சுற்றாடலுக்கு தீங்குகள் ஏற்படுகின்றன .

நாட்டில் ஒரு காலகட்டத்தில் ஒட்டுப்பலகை பாவனை அதிக அளவில் இருந்தது. ஜின்தோட்டையில் உள்ள ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம் மிக இலாபம் தரும் ஒரு தொழிற்சாலையாக இருந்தது. இன்று ஒட்டுப்பலகைக்கு பதிலாக சீனநாட்டின் உற்பத்தியான எம்.டி.எப் எனப்படும் செயற்கைப் பலகை பயன்படுத்தப்படுகின்றது.

மரப்பாவனை குறைவடைவதால் மகிழ்ச்சி அடைந்தாலும் மறுபுறம் செயற்கை பொருள் பாவனை சூழலுக்கும் மனிதனுக்கும் தீங்குவிளைவிக்கக் கூடியதாக உள்ளது.

ஆர். நவராஜா
தெல்தோட்டை தினகரன் நிருபர்

# ஆயித்தியமலை புனித சதாசகாய மாதா திருவிழாவில் பெருமளவு பக்தர்கள்



கிழக்கில் பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு ஆயித்தியமலை புனித சதாசகாய அன்னை திருத்தலத்தின் 66 வது வருடாந்த திருவிழா நேற்று மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி பேரருட்திரு. ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலியாக நிறைவேற்றப்பட்டது.



இந்த ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 28 ம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. ஆலயத்தின் பங்குத் தந்தை வண.அன்டனி டிலிமா தலைமையில் நவநாள் ஆராதனைகள் இடம் பெற்றன. இவ்வருட நற்கருணை ஆண்டை முன்னிட்டு விசேட செபமாலை வழிபாடுகள், திருப்பலி ஒப்புக்கொடுத்தல் ஆகியன இடம் பெற்றன.

அன்னையின் திருச்சொரூப பவனி கடந்த சனியன்று மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்திலிருந்து வவுணதீவு வழியாகவும் செங்கலடி புனித நிக்கலஸ் ஆலயத்திலிருந்து கரடியனாறு வழியாகவும் நடைபெற்றன.

நேற்றைய திருநாள் திருப்பலி மறைமாவட்டஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. நற்கருணை வழிபாட்டுடன் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டதுடன் நாட்டுக்கு நல்லாசி வேண்டியும் கொரோ னா வைரஸ் தாக்கத்திலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்காகவும் விசேட பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

இங்கு பெருமளவு பக்தர்கள் பிரசன்னமாகியிருந்தனர். ஆயித்திய மலை புனித சகாயமாதா திருத்தலத்தின் வருடாந்த உற்சவத்தில் கலந்து கொண்ட பக்தர்களுக்காக இராசமாணிக்கம் மக்கள் அமைப்பு மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வாலிபர் முன்னணி என்பவற்றின் ஏற்பாட்டில் வவுணதீவு ஆயித்தியமலை பிரதான வீதியில் தாகசாந்தி நிலையம் அமைக்கப்பட்டு பக்தர்களுக்கு தண்ணீர் மற்றும் சிற்றுண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பில் 150 வருடங்கள் தொன்மை வாய்ந்த சதா சகாய மாதா ஆலயம் புகழ் பெற்ற திருத் தலமாகும். அரசாங்க வர்த்தமானி மூலம் அங்கீகரிக்கப்பட்ட இத்திருத்தலத்தில் வருடாந்த திருவிழா அரசாங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெற்று வருகின்றது. நீர்கொழும்பு, அம்பாறை மற்றும் நாட்டின் பல பாகங்களிலுமிருந்து கிறிஸ்தவ அடியார்கள் இத்திருத்தலத்துக்கு வருவதுடன் அங்கு தங்கியிருந்து திருவிழாவில் பங்குபற்றி வருகின்றமை விசேட அம்சமாகும்.

தீராத நோய்கள் குணமடைதல், குழந்தை பாக்கியமற்றவர்கள் குழந்தை வரத்தினைப் பெற்றுக் கொள்ளல் போன்ற அற்புதங்களை வழங்கும் திருத்தலமாக இந்த ஆலயம் விளங்குகின்றது. அடியார்கள் நேர்த்திக்கடன் வைத்து இத்திருத்தலத்திற்கு பாதை யாத்திரை மேற்கொண்டு நம்பிக்கை வைத்து வணக்கவழிபாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றைய இறுதிநாள் திருவிழா நிகழ்வின் போது நாட்டின் பலபாகங்களிலுமிருந்து கிறிஸ்தவ பக்தர்கள் பெருமளவில் வருகை தந்திருந்தனர். கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் விதத்தில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி இந் நிகழ்வினை நடத்துவதற்கான ஏற்பாடுகளை சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவுகள் செய்திருந்தன.

வவுணதீவு பிரதேச செயலகம், உள்ளூராட்சி சபை, நீர்ப்பாசன திணைக்களம், வீதி அபிவிருத்தி திணைக்களம், பொலிஸ் திணைக்களம், பாதுகாப்புப் பிரிவு, சாரணிய இயக்கம் மற்றும் சமூக அமைப்புக்கள்,கிறிஸ்தவ அமைப்புக்கள் இணைந்து இத்திருவிழாவிற்கு பங்களிப்பு நல்கியிருந்தன.



பெரியபோரதீவு தினகரன் நிருபர்
**வ.சக்திவேல்...**
மட்டக்களப்பு சுழற்சி நிருபர்
**பீ.ரீ.ஏ.லத்தீப்...**



# புங்குடுதீவில் மரபுரிமை சின்னமாக பாதுகாக்கப்படும் பெருக்கு மரம்

## சுவிஸ்- புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத்தின் அரிய முயற்சி

தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப் புணர்வு முன்னொரு போதும் இல்லாத அளவிற்கு தமிழ் மக்களிடையே ஏற்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் வணிகத்தின் பொருட்டு அநுராதபுரத்தில் அமைத்த மடம் பற்றி அங்குள்ள கல்வெட்டு கூறுகின்றது. தற்போது சுவிஸ்_ புங்குடுதீவு மக்கள் விழிப் புணர்வு ஒன்றியத்தின் முழுமையான நிதி உதவியுடன் புங்குடுதீவில் உள்ள பெருக்குமரம் அப்பிரதேசத்தின் மரபுரிமைச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

தீவகத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் இப்பெருக்கு மரத்தையும் பார்வையிட்டு வருவதால் அவர்களின் வசதி கருதி பெருக்கு மரத்தின் சுற்றாடலும், அதையொட்டிய கடலோரமும் அழகுபடுத்தப் பட்டுள்ளன. அங்கு மலசலகூட வசதியும், சிறுவர் விளையாட்டு அரங்கும் ஏற்படுத்தப்பட்டு அந்த இடம் சுற்றுலா மையமாக மாற்றப் பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இவ்விடத்தில் மரபுரிமைச் சின்னங்களை காட்சிப் படுத்தக் கூடிய அருங்காட்சியகம் ஒன்றை அமைப்பதற்கும் சுவிஸ்_ புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம் தீர்மானித்திருப்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். இதன் மூலம் புங்குடுதீவுக்கு மேலும் ஓர் புதிய முகவரி கிடைக்கும் என்று அம்மக்கள் கூறுகின்றனர்.

தற்போது புங்குடுதீவில் பாதுகாக்கப்பட்டுள்ள பெருக்கு மரம் 'அடன்சோனியா' எனப்படும் பேரினத்தைச் சேர்ந்த மரமாகும். இது ஐந்து முதல் முப்பது மீற்றர் உயரத்திற்கு வளரக் கூடியது.

ஏழு முதல் பதினொரு மீற்றர் விட்டம் கொண்டது. தமது உடற்பகுதியில் சுமார் 120000 லீற்றர் நீரை சேமித்து வைத்து கடுமையான வரட்சியைத் தாங்கும் தன்மை கொண்டது.

மடகஸ்கார் போன்ற நாடுகளில் இம்மரத்தின் இலைகளும், காய்களும் உணவுக்காக ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இவ்வகை மரங்கள் மடகஸ்கார், ஆபிரிக்கா, அரேபியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் சொந்த மானவையாக காணப்பட்டாலும் இலங்கைக்கு இம்மரத்தை அறிமுகப்படுத்தியவர்கள் அரேபிய வணிகர்களாவர்.

கி.பி. 6 ஆம் நூற்றாண்டுக்கும், கி.பி.16ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் இலங்கையின் அயல்நாட்டு வாணிபத்தில் அரேபிய வணிகர்கள் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளனர். அவர்கள் வணிகத்தின் பொருட்டு இலங்கையில் தங்கியிருந்த கடற்கரை நகரங்கள், துறைமுகங்களில் இம்மரத்தை நாட்டியுள்ளனர். இவ் வரலாற்றுப் பின்னணி கொண்ட இடங்களிலேயே பிற்காலத்தில் போத்துக்கேயர் ஒல்லாந்தர் தமது கோட்டைகளையும் அமைத்தனர். இதற்கு நெடுந்தீவு, மன்னார், காலி முதலான இடங்களில் உள்ள கோட்டைகளும், அவற்றின் அருகேயுள்ள பெருக்கு மரங்களும் சான்றாகும்.



இதனால் புங்குடுதீவில் பெருக்கு மரங்கள் நாட்டப்பட்டமைக்கு அப் பிரதேசத்தின் அமைவிடமும், அதன் வரலாற்றுப் பழமையுமே முக்கிய காரணம் எனலாம். ஏனெனில் தீவகமே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து இலங்கை_ தமிழக உறவின் தொடக்க வாயிலாகவும், முதற்படியாகவும் இருந்துள்ளது. தமிழகத்தில் காலத்திற்கு காலம் தோன்றி வளர்ந்த பண்பாடு முதலில் தீவகத்திற்குப் பரவி அங்கிருந்தே வடஇலங்கைக்கும், இலங்கையின் ஏனைய இடங்களுக்கும் பரவியதாக வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தின் பூர்வீக மக்கள் பற்றி ஆய்வு செய்த பேராசிரியர் பொ.இரகுபதி, தீவகத்தின் தொன்மையான குடியிருப்பு மையங்களாக காரைநகர், வேலணை, புங்குடுதீவு முதலான இடங்களைக் குறிப்பிடுகின்றார். மகாவம்சத்தில் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே புங்குடுதீவு 'பியங்கு தீப(ம்)' எனக் குறிப்பிடுகின்றது. இதில் இருந்து புங்குடுதீவின் வரலாற்றுத் தொன்மை தெரிய வருகின்றது.

கிறிஸ்தவ சகாப்தத்தில் இருந்து தமிழ்நாடு, இந்தியா, உரோம், அரேபியா, சீனா முதலான நாடுகளின் வணிகத் தொடர்புகள் புங்குடுதீவு உட்பட தீவகத்தின் கரையோரங்களில் ஏற்பட்டிருந்ததற்கு நம்பகரமான ஆதாரங்கள் உள்ளன.

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் எழுந்த நம்பொத்த என்ற சிங்கள இலக்கியம் வடஇலங்கையை தமிழ் பட்டினம் (தமிடபட்டின) எனக் குறிப்பட்டு அங்குள்ள முக்கிய வரலாற்று இடங்களைக் குறிப்பிடுகின்றது. அவற்றுள் கணிசமான இடங்கள் தீவகத்தை குறிப்பதாக உள்ளது.

அமரர் பேராசிரியர் வி.சிவசாமி தனது இளமைக் காலத்தில் தற்போது புங்குடுதீவில் பாதுகாக்கப்பட்ட பெருக்கு மரத்திற்கு அருகில் மேலும் பல பெருக்கு மரங்கள் இருந்ததாகவும், அவற்றுக்கு அருகில் போத்துக்கேயர் அல்லது ஒல்லாந்தர் கால வெளிச்சவீட்டின் அழிபாடுகளும், மற்றும் நெடுந்தீவை ஒத்த கல்வேலிகளும் இருந்ததாகவும் கூறியுள்ளார்.

இவ்வாதாரங்களை வைத்து நோக்கும் போது தற்போது பெருக்குமரம் காணப்படும் புங்குடுதீவுப் பிராந்தியம் முன்பொரு காலத்தில் மன்னார், காலி போன்ற கடல்சார் தொடர்பின் வணிக நகரமாகவும், துறைமுகமாகவும் இருந்திருக்கலாம் எனக் கூறலாம். ஆயினும் தற்போது அதை அடையாளப்படுத்தி காட்டும் ஒரேயொரு நினைவுச் சின்னமாக பெருக்கு மரத்தையே பார்க்க முடிகின்றது.

தற்போது வடமாகாண கல்வியமைச்சின் செயலாளராக உள்ள இ.இளங்கோவன், முன்னாள் அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் ஆகியோரின் நேரடி வழிகாட்டலிலும், சுவிஸ்_ புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத் தலைவர் சொக்கலிங்கம் ரஞ்சனின் கண்காணிப்பிலும், இலங்கை தொல்லியல் திணைக்கள ஆலோசனையிலும், சுவிஸ்_ புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம் தமது கிராமத்தின் மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாப்பதை முக்கிய இலட்சியமாகக் கொண்டு செயல்படுகின்றது. எதிர்காலத்தில் யாழ்ப்பாண தொல்லியல் திணைக்களத்தின் உதவியுடன் பெருக்கு மரம் அமைந்துள்ள சூழலில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டால் இவ்விடத்தில் அமையவிருக்கும் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்துவதற்குரிய வரலாற்றுப் பெறுமதியுடைய மரபுரிமைச் சின்னங்கள் கிடைக்கக் கூடும்.

**ஐ.சிவசாந்தன்...**

# சீனாவுடன் யுத்தம் மூண்டால் இந்தியா தோல்வியடைவது உறுதி

## 'குளோபல் டைம்ஸ்' பத்திரிகை வெளியிட்ட பரபரப்புத் தகவல்



'சீனாவை சீண்டினால் இந்தியா தோல்வி அடையும், எல்லைப் பிரச்சினை போராக மாறினால் அதில் இந்தியா வெற்றி பெற வாய்ப்பே இல்லை' என்று சீனாவின் 'குளோபல் டைம்ஸ்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. இந்தியா_சீனா இடையே எல்லையில் உள்ள லடாக்கில் மீண்டும் பதற்றம் ஏற்படத் தொடங்கி உள்ளது.

லடாக் எல்லை பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் சீனாவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் வெய் பெங்கே இடையே ரஷ்யாவில் ஆலோசனை நடந்தது. இவர்கள் சமார் இரண்டு மணி நேரம் ஆலோசனை செய்தனர். இந்த ஆலோசனை மிகவும் காரசாரமாக அமைந்து இருந்தது. எல்லைப் பிரச்சினைக்கு இந்தியாதான் காரணம் என்று சீனா இதில் குற்றஞ் சாட்டியது. சீனா எல்லையில் தேவையில்லாமல் அத்துமீறுவதாக இந்தியா புகார் வைத்துள்ளது.

இந்த சந்திப்பைத் தொடர்ந்து சீன அரசின் கண்காணிப்பில் இயங்கி வரும், அரசுக்கு நெருக்கமான 'குளோபல் டைம்ஸ்' இதழில் முக்கியமான கட்டுரை ஒன்று வெளியாகி உள்ளது. இந்த கட்டுரை குறித்து அதில் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. அதில், 'இந்தியா_ சீனா இடையே போர் வந்தால் அதில் சீனாதான் வெற்றி பெறும். இந்தியா அதை எப்போதும் நினைவில் கொண்டு செயல்பட வேண்டும். தேசிய அளவிலும், பொருளாதார அளவிலும், இராணுவ அளவிலும் இந்தியாவை விட சீனாதான் வலிமையான நாடு. இந்தியாவை விட சீனா பல மடங்கு சக்தி கொண்டது. இந்தியா_ சீனா இரண்டும் பெரியநாடுகள்தான். ஆனால் இராணுவம், மோதல் என்று வந்தால் சீனாதான் சிறப்பானது.

இந்தியா கண்டிப்பாக சீனாவை சீண்டினால் தோல்வி அடையும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 'எல்லை மோதல் போராக மாறினால் இந்தியாவிற்கு வெற்றி பெற வாய்ப்பே இல்லை. இரண்டு நாட்டு பாதுகாப்பு அமைச்சர்கள் இப்போது ஆலோசனை செய்துள்ளனர். இரண்டு நாட்டு உறவை இது மேம்படுத்தும் என்று நம்புகிறோம். எல்லையில் இதனால் பதற்றம் தணியும் என்று நம்புகிறோம். இந்த பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிய வேண்டும் .

தேசியவாத கொள்கை காரணமாக இந்தியாவில் மக்கள் எல்லைப் பிரச்சினை மீது கவனம் செலுத்துகிறார்கள்.

இந்தியா தனது மக்களை கட்டுப்படுத்த வேண்டும். தங்கள் மக்களுக்கு தேவையானதை மட்டுமே கொடுக்க வேண்டும். அவர்களின் கவனத்தை முன்னேற்றத்தை நோக்கி திருப்ப வேண்டும். சீனா எல்லையில் அமைதியை மட்டுமே விரும்புகிறது.

ஆனால் இந்தியா எல்லையில் அத்துமீற நினைக்கிறது' என்று அந்த கட்டுரை குறிப்பிட்டுள்ளது.

## முட்டையின் விலை...

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று முன்தின் தங்காலை கால்டன் இல்லத்தில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்த சந்திப்பில் மக்களுக்கு சலுகைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக முட்டை விலையை குறைக்க நடவடிக்கையெடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச விடுத்த கோரிக்கைக்கு அமையவே முட்டை விலையை இரண்டு ரூபாவால் குறைக்க முட்டை உற்பத்தியாளர் சங்கம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

முட்டை உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் வழங்கும் சலுகைகளை கருத்திற்கொண்டு முட்டை விலையை குறைக்குமாறு பிரதமர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய முட்டை விலையை குறைக்க தீர்மானித்துள்ளதாகவும் இன்றுமுதல் வெள்ளை முட்டை ஒன்றை 18 ரூபாவுக்கும் சிவப்பு முட்டை ஒன்றை 18.50 ரூபாவுக்கும் முட்டை உற்பத்தியாளர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சங்கத்தின் தலைவர் ஆர்.எம்.சரான் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

கோழிக் குஞ்சி ஒன்றின் விலை 3.50 ரூபாவாக உயர்வடைந்துள்ளதால்தான் முட்டையின் விலை அதிகரித்துள்ளது. கோழிக் குஞ்சியின் விலையை 1.75 ரூபாவை குறைக்க நடவடிக்கையெடுக்குமாறு பிரதமரிடம் தாம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத் தலைவர் மேலும் கூறியுள்ளார். தற்பொழுது கோழி முட்டை 20 ரூபா முதல் 22 ரூபாவரை விற்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## மத்திய சுகாதார சேவை...

வழங்கப்பட்டிருந்தால் கொவிட் 19 நோய்த் தொற்றுக்கு இலங்கை முகங்கொடுக்கும் போது அதன் செயற்திறன் இதற்கு மாற்றமாக அமைந்திருக்கலாம் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஒரு சில நடவடிக்கைகளுக்காக மத்திய அரசுடன் இணைந்து பொறுப்பை செயற்படுத்தும் முக்கியத்துவம் எமது அண்மைக் கால அனுபவங்களின் மூலம் உறுதி செய்யப்படுவதோடு, கல்வி இதுபோன்ற இனங்காணக்கூடிய இன்னுமொரு துறையாகும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

களனி பொல்லேகல, மானெல்வத்த நாகானந்த சர்வதேச பௌத்த கல்வி நிலையத்தில் (05) "சிறந்த உள்வாரி வதிவிடவாளர்" (Good Intern Programme 2020) பயிற்சி பட்டறையில் ஆரம்ப உரை நிகழ்த்தும்போதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இக்கருத்துக்களை தெரிவித்தார். *(விபரம் 02ஆம் பக்கம்)*

## 32 இலட்சம் பெறுமதியான 800 கிலோ ...

தகவல்களுக்கிணங்க கல்பிட்டி ஏத்தாளை பிரதேசத்தில் போக்குவரத்துக்காக லொறியில் ஏற்றப்பட்ட நிலையில் மேற்படி 800 கிலோ மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் மூன்று சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த ஒரு வாரங்களுக்குள் இந்தியாவிலிருந்து இறக்குமதி வரியின்றி படகுகள் மூலம் சட்டவிரோதமாக மேற்படி மஞ்சள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி மஞ்சளின் பெறுமதி 32 இலட்சம் ரூபாவாகும் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர். அதேவளை,அதிக விலைக்கு மஞ்சளை விற்பனை செய்த 50 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் நாடளாவிய ரீதியில் இதுவரை 120 சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. இதனிடையே, கலப்படம் கலந்த மஞ்சளை விற்பனை செய்வோர் தொடர்பிலான சுற்றிவளைப்புகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அத்தகையோருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் தெரிவித்தது.(ஸ)

## இஸ்லாமிய கல்வி பாடத்திட்டத்தில்...

முஸ்லிம் மத, கலாசார அலுவல்கள் பணிப்பாளர் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில், இஸ்லாமிய கல்விப் பாடத்திட்டத்தில் மாற்றங்களை முன்மொழிவதற்குக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் குழுவின் பரிந்துரைகளை முஸ்லிம் மத, கலாசார அலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சுக்குச் சமர்ப்பிக்குமென்றும் தெரிவித்தார். திணைக்களத்திற்கு மாற்றங்களைச் செய்யும் அதிகாரம் இல்லாததால், அதனைக் கல்வித் திணைக்களமோ, கல்வி அமைச்சோ மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

2019 ஏப்ரல் 21ஆம் திகதி குண்டுத் தாக்குதல் இடம்பெறும்போது நாட்டில் 1,689 மத்ரசா கல்விக் கூடங்கள் இருந்ததாகவும் அவற்றைப் பதிவு செய்ய முறையான திட்டங்கள் இல்லையென்று குறிப்பிட்ட அவர், மத்ரசாக்களைப் பதிவு செய்வதற்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டுமென்றும் சுட்டிக்காட்டினார்.

## எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ளதா....

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சங்கமன்கந்தை கடற்பரப்பில் இருந்து 38 கடல் மைல் தூரத்தில் பயணித்துக் கொண்டிருந்த எண்ணெய்க் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்து கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் கல்முனை கடற்பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான எண்ணெய் படிமங்கள் பிரதேச கடற்றொழிலாளர்களினால் அவதானிக்கப்பட்டது. இதனால் அச்சமடைந்த கடற்றொழிலாளர்கள் தொழிலுக்கு செல்வதை நிறுத்தியிருந்தனர். குறித்த விடயம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து நாரா எனப்படும் நீரியல் வள ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் நவரட்ணராஜா தலைமையிலான அதிகாரிகளுடன் சனிக்கிழமை (05) அவசர கலந்துரையாடலை நடத்திய அமைச்சர், கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சம் தொடர்பில் உடனடியாக ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேசியப்பட்டியலுக்கு...

ஆராயப்பட்டதாகவும் அநேகரின் கருத்து அதுவாகவே உள்ளதாகவும் அவர் கூறினார். ஐக்கிய தேசியக் கட்சியின் 74 ஆவது ஆண்டு நிகழ்வு, நேற்று (06) சிறிகொத்தாவில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் மத அனுஷ்டானங்களுடன் நடைபெற்றது. அதன் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்று இந்த நிகழ்வின் பின்னர் இதில் பங்கேற்ற கட்சி முக்கியஸ்தர்கள் கட்சியை வலுப்படுத்தும் விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்ததாக அறிய வருகிறது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்,சில காலங்களுக்காவது கட்சி தலைவராக கரு ஜெயசூரிய நியமிக்கப்பட வேண்டும் எனவும் தான் தலைமைத்துவத்திற்கு ஆசைப்பட்டு பின்னால் ஓட தயாரில்லை என்றும் அவர் கூறினார்.

## ஊவா பட்டதாரிகளுக்கு...

தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார். ஊவா மாகாண தலைமை செயலாளருக்கும், செந்தில் தொண்டமானுக்குமிடையிலான சந்திப்பொன்று செயலாளரின் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இக் கோரிக்கையை முன்வைத்தார்.

ஊவா மாகாணத்தில் அரச துறைகளில் நிலவும் ஆளணி பற்றாக்குறை தொடர்பில் ஆராய்ந்து, அது தொடர்பில் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு அறிவித்து, ஆளணி பலம் தேவைப்படுகின்ற துறைகளுக்கு ஊவா மாகாண பட்டதாரிகளையே நியமிக்க வேண்டும் எனக் வேண்டுகோள் விடுத்தார்.

## தனி வழியில் பயணிக்க...

ஆயினும் தானே அமைப்பின் தேசிய அமைப்பாளராகத் தொடர்ந்தும் செயற்படுவேன் என்று மணிவண்ணன் கூறினார்.

இதனை அடுத்து கட்சி உறுப்புரிமையில் இருந்து மணிவண்ணன் நீக்கப்பட்டுள்ளார் என கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று பகிரங்கமாக அறிவித்தார். இந்நிலையில் மணிவண்ணனைத் தலைமை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அமைப்பாகச் செயற்படும் என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பில் யாழ்.மாநகர சபை உறுப்பினர் பார்த்தீபன் உட்பட பல மாநகர, நகர, பிரதேச சபை உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர்களும் இணைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆணைக்குழுவில் ஆஜராக...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட்ட குமரன் சர்வானந்தனுக்கும் குறித்த அழைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, எதிர்வரும் 17ஆம் திகதி குறித்த இருவரும் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாக வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் வழங்கிய சாட்சியத்துக்கமைவாகவே குறித்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வித்யா கொலை வழக்கின் பிரதான சந்தேக நபரான மஹாலிங்கம் சசிகுமார் எனப்படும் சுவிஸ்குமார் என்பவரை விடுவிக்குமாறு விஜயகலா மகேஸ்வரன் நேரடி அழுத்தம் வழங்கியதாக குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் சாட்சியமளித்துள்ளார். அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையான போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதேவேளை, 2011ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் தான் உள்ளிட்ட 5 பேர் 10 வருட சிறைத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டமை, விஜயகலா மகேஸ்வரனின் அழுத்தம் காரணமாகவே என கருதுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## பல பகுதிகளில் கடும் காற்றுடன்...

காணப்படுகின்றது. கடற்கரையோரங்களில் 70 கி.மீ வேகத்தில் காற்று வீசக் கூடும். வானிலை மாற்றம் தொடர்பில் பொது மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும். குறிப்பாக இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும். மேற்கு மற்றும் தென்மேற்கு ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளில் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 4555 கிலோ மீற்றர் வரை காணப்படும். கடற்பரப்புகள் அவ்வப்போது கடல்; கொந்தளிப்பாகக் காணப்படும் என்பதால் மீனவ சமுதாயம் காலநிலை குறித்த உரிய தெளிவுடன் பணியை முன்னெடுக்க வேண்டுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று பிற்பகல் மற்றும் மாலை வேளையில் கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, களுத்தறை, கம்பஹா, அம்பாறை உட்பட நாட்டின் பல மாவட்டங்களில் கரையோரப் பகுதிகளில் வீசி கடும் காற்றுக் காரணமாக பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. சில பகுதிகளில் வீடுகளுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

நாட்டின் சில பகுதிகளில் ஓரளவு வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டுள்ளது.

கொழும்பின் புறநகர் வீதிகளும் நீரில் முழ்கியிருந்தன. கடும் காற்றுடனான வானிலை காரணமாக மீனசமூகத்தை கடலுக்குச் செல்ல வேண்டாமென வளிமண்டலவியல் திணைக்களமும், கடற்றொழில் திணைக்களமும் அறிவுறுத்தியுள்ளது.

## சட்டநடவடிக்கை தொடர்பில்...

கடற்படையினருடன் இணைந்து செயற்படுவதற்கு மேலும் இரண்டு இந்திய கப்பல்கள் குறித்த பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. அதற்கிணங்க கடற்படையினரின் மூன்று கப்பல்கள்இ வேகமாக செயற்படும் மூன்று விசேட கப்பல்கள்இ கடல் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான இரண்டு கப்பல்கள் மற்றும் இந்திய கப்பல்கள் ஆறு என பெருமளவு கப்பல்கள் மற்றும் ஹெலிகொப்டர்களும் மேற்படி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.

அத்துடன் கடலில் எண்ணெய் கசிவு ஏற்படுவதற்கான எந்தவொரு அறிகுறியும் இதுவரை காணப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கப்பலிலிருந்து மீட்கப்பட்ட மாலுமி தவிர்ந்த ஏனைய 20 நபர்களும் கடற்படையினரால் கடற்படை கப்பலொன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தமது குடும்பத்தினரோடு தொலைபேசி மூலம் உரையாடுவதற்கும் ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் நியூ டயமன் எரிபொருள் கப்பலில் தீ பிடித்தமை தொடர்பில் ஆராய்வதற்காக ஆறு பேர் கொண்ட விசேட வெளிநாட்டு குழுவொன்று நேற்று இலங்கை வந்துள்ளது.

மேற்படி கப்பல் தரையிலிருந்து 40 கடல் மைல் தூரத்தில் 74 மீற்றர் ஆழமுள்ள கடற் பிரதேசத்தில் தற்போது உள்ளதாகவும் இரசாயனம் மற்றும் தண்ணீர் உபயோகப்படுத்தப்பட்டு தீயணைக்கும் செயற்பாடுகளும் அப்பிரதேசத்தை குளிர்மைப்படுத்தும் நடவடிக்கைகளும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினருடன் இணைந்து செயற்படுவதற்கு மேலும் இரண்டு இந்திய கப்பல்கள் குறித்த பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. அதற்கிணங்க, கடற்படையினரின் மூன்று கப்பல்கள், வேகமாக செயற்படும் மூன்று விசேட கப்பல்கள்இ கடல் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான இரண்டு கப்பல்கள் மற்றும் இந்திய கப்பல்கள் ஆறு என பெருமளவு கப்பல்கள் மற்றும் விமானங்களும் மேற்படி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன என்றும் கடற்படையினர் தெரிவித்தனர். (ஸ)

## தன்மானத்தை இழக்க...

நோக்காகும் என தேசிய காங்கிரசின் தேசிய தலைவரும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஏ .எல். எம். அதாவுல்லா தெரிவித்தார்.

"தேசிய காங்கிரஸ் எப்போதும் கனவான் அரசியலையே மேற்கொண்டு வருகின்றது . அற்ப சொற்ப சலுகைகளுக்காக தன்மானத்தையும் சுயகௌரவத்தையும் இழந்த ஒரு சோரம்போன அரசியலை ஒருபோதும் செய்யவில்லை. செய்யப்போவதுமில்லை. தேசியக்காங்கிரஸ் போராளிகளும் தொண்டர்களும் அவ்வாறே. உணவுப்போதிகளுக்கும் பணத்திர்க்கும் விலைபோபவர்கள் அவர்களல்ல. யாரும் அவர்களை வாங்கவும் முடியாது, யாராலும் அவர்களை ஏமாற்றவும் முடியாது என்றும் அவர் கூறினார்.

அக்கரைப்பற்று மாநகரப்பூங்கா வளாகத்தில் , தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி சொல்லலும் "வெற்றிக்கு எம்பொலி" நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற் றிய போதே அதாஉல்லாஹ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அ.அகமட் சக்கி தலைமையில் நடைபெற்ற இந்நிகழவிற்க்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் அதாஉல்லாஹ் அக்கரைப்பற்று இங்குள்ள மூன்று ஜும்ஆப்பள்ளி வாசல்கள் உட்பட பள்ளிவாசல்கள், பாடசாலைகள், கல்வி சமூக சேவை அமைப்புகளால் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவங்களிலும் கலந்து கொண்டார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் 'சலுகைகள் பெறுவதோ, அமைச்சுப்பதவிகள் பெறுவதோ எமது நோக்கல்ல. ஒரு திடமான சக்திமிக்க அரசு ஒன்றை தோற்றுவிப்பதன்மூலம் நாட்டை சுபீட்சப்பாதைக்கு கொண்டுசெல்வதே எமது நோக்காகும். அபிவிருதிப்பணிகளை முன்னெடுத்து செல்வதில் சாதனைகள் பலபுரிந்த அப்போதைய ஜனாதிபதியும் இப்போதைய எமது பிரதமர் மகிந்த ராஜபக்ஸவும், ஒரு நேர்மைமிக்க கனவானான எமது ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவும் நாட்டை கட்டியெழுப்ப, சுபீட்சபாதைக்கு கொண்டு செல்ல மிகவும் பொருத்தமாமன ஆற்றல்மிக்கவர்கள். எனவே , அவர்களின் பங்காளிக்க கட்சியான தேசிய காங்கிரசை பலப்படுத்துவோம். இதுவே நமது விமோசனத்துக்கு ஒரே வழி என்றார்.

எல்லாமே நலமாகவே நடந்திருக்கின்றன என்றும் நடக்க போகிறவைகளிலும் நன்மைகளே வந்து சேரும் என்றும் அவர் கூறினார். இறுதியில் அனைத்துப்பள்ளிவாசல் தலைவர் எச்.சீ.எம். லாபீர் அதாவுல்லாவுக்கு பொன்னாடை போர்த்தி, நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்தார்.

## 13 திருத்தம் இரத்து ...

ஒப்பந்தமாகும். 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கும் முயற்சிகள் ஏதும் திறைமறைவில் முன்னெடுக்கப்டுக்கப்பட்டால் அதனை முறியடிக்க உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழத் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் என கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் நாட்டில் பலவிதமான கருத்தாடல்கள் இடம்பெற்றுவரும் பின்புலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தை எவ்வாறு அவதானித்து வருகிறதென 'தினகரன்' பத்திரிகை வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

13ஆவது திருத்தச்சட்டம் தமிழ் மக்களுக்கான முழுமையான தீர்வு இல்லை என்பதை தமிழ் மக்கள் அதனை அறிமுகப்படுத்திய போதே தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தனர். இலங்கையில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் இருநாடுகளுக்கும் இடையில் செய்துக் கொள்ளப்பட்ட ஒப்பந்தமாக இது.இருந்த போதிலும் இன்றுள்ள சூழலில் தமிழ் மக்களுக்கு அற்ப சொற்ப அதிகாரங்களை பகிரக் கூடிய ஒரு தீர்வுத்திட்டமாக இது உள்ளது.

13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்க வேண்டுமென பலர் தனிப்பட்ட ரீதியில் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். அது அவர்களது தனிப்பட்ட கருத்தாகும். அரசாங்கம் 13ஆவது திருத்தச்சட்டம் குறித்து எவ்வித கருத்துகளையும் இதுவரை தெரிவிக்கவில்லை.

13ஆவது திருத்தச்சட்டத்தை இலகுவாக நீக்கிவிட முடியாது. இது ஒரு விளையாட்டுத்தனமான விடயமல்ல. இரு நாடுகளுக்கும் இடையில் செய்துக்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தமாகும். ஒப்பந்தத்தை செய்துள்ள இந்தியா இந்த விடயத்தை நீக்குவதற்கு ஒருபோதும் இடமளிக்காது. 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுக்காதென்றே கருதுகிறோம். அதற்கான துணிவு அரசாங்கத்திடம் இல்லை.

இந்தியாவில் தற்போது மோடி அரசாங்கம் உள்ளதால் அவர்கள் இதனை கண்டுகொள்ள மாட்டார்களென சிலர் கூறுகின்றனர். அவ்வாறில்லை. மோடி அரசாங்கமோ அல்லது ராஜீவ் அரசாங்கமோ அல்ல இதில் முக்கியம். இந்திய அரசாங்கம் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளது. இலங்கையில் அரசாங்கங்கள் மாறினால் கடந்த அரசாங்கம் செய்த ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்படுவது போன்று இதனை அர்த்தப்படுத்திக் கொள்ளகூடாது.இந்தியாவில்அரசாங்கங்கள் மாறினாலும் அதன் வெளிவுறவுக் கொள்கை மாறாது. இதுதான் ஆரம்ப காலம் முதல் இந்தியா கடைப்பிடிக்கும் வரலாறு.

நாம் இந்தியாவுடன் இராஜந்திர பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சந்திப்புகளை தற்போது மேற்கொள்வது கடினம். என்றாலும் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அரசாங்கம் ஏதும் நகர்வுகளில் ஈடுபட்டால் நாம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதனை முறியடிப்பதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுப்போம் என்றார்.

## அனைத்துப் பாடசாலைகளிலும் நாளை...

வைரஸ் சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் கல்வி நடவடிக்கைகளுக்காக பல கட்டங்களாக ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க ஆரம்ப வகுப்புகளுக்கான கல்வி நடவடிக்கைகள் நாளை 8ம் திகதி முதல் ஆரம்பமாவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2ம் திகதி முதல் ஆறு தொடக்கம் 13 தரம் வரையிலான மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதற்கிணங்க,நாளைய தினம் 7ம் திகதி பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு வகுப்புகளின் ஆசிரியர்கள் மற்றும் ஆளணியினர் பாடசாலைகளுக்கு வருகை தரவுள்ளனர். அதனையடுத்து நாளை மறுதினம் குறித்தபடி அனைத்து கல்விநடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மாணவர்கள் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவதில் அலட்சியம் காட்டுவதாக முறைப்பாடுகள் கிடைத்துவருகின்ற நிலையில் சுகாதார நடைமுறைகள் தொடர்ச்சியாக பின்பற்றப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ)

## கப்பல் தீ விபத்தை ஆராய...

சேர்ந்த நிபுணர்கள் குழுவே இவ்வாறு கப்பலை ஆராய்வதற்காக இலங்கை வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கையின் கிழக்கு கடற்பரப்பில் 38 கடல் மைல்கள் தொலைவில் பனாமா நாட்டுக்குச் சொந்தமான கப்பலொன்று கடந்த 3ஆம் திகதி தீ விபத்துக்கு உள்ளானது. ஈராக்கில் இருந்து இந்தியாவுக்கு 2,70,000 தொன் மசகு எண்ணெய்யை கொண்டுசென்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே கப்பல் தீ விபத்துக்கு உள்ளானது.

இலங்கை இந்திய கடற்படையின் கூட்டு முயற்சியால் தீ பரவல் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் காற்றின் வேகம் காரணமாக அவ்வப்போது தீ பரவலுக்கான வாய்ப்புகள் உள்ளதால் தண்ணீர் மற்றும் இரசாயனங்களை கொண்டு தீ அணைக்கும் முயற்சி தொடர்ந்தும் இடம்பெறுவதாகவும் இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் கடற்படை ஊடகப் பேச்சாளர் இந்திக டி சில்வாவிடம் வினவிய போது, கப்பலில் தீ பரவல் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. அங்கு தொடர்ந்து இலங்கை இந்திய கடற்படையின் கப்பல்களும், ஹெலிகொப்டர்களும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கப்பல் தீ விபத்துக்கு உள்ளானமைக்கான காரணம் மற்றும் இழப்பீடுகள் குறித்து ஆராய விசேட நிபுணர்கள் குழுவொன்று பிரித்தானியா மற்றும் நெதர்லாந்திலிருந்து இலங்கை வந்துள்ளது. கப்பலின் உரிமையாளரின் நடவடிக்கையின் பிரகாரம் இந்த நிபுணர் குழு இலங்கை வந்துள்ளதுடன், அவர்கள் பி.சீ.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு கல்முனையிலிருந்து கப்பல் நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஆழ்கடலுக்கு அனுப்பட்டுள்ளனர்.

இலங்கையின் கடற்படையினரும் தொடர்ந்து இந்நடவடிக்கையில் கூட்டு முயற்சியிலும் கண்காணிப்பிலும் ஈடுபட்டுள்ளனர் என்றார்.40 கிலோ மீட்டர் தூரத்திற்கு கப்பல் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது தெரிந்ததே.

## சுங்க அதிகாரிகள்... (03 ஆம் பக்கத் தொடர்)

இச்சந்தேக நபர்கள் நீண்டகாலமாக இவ்வாறு மோசடிகளைச் செய்து வந்துள்ளதாக ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸ் குற்றத்தடுப்பு பிவிரினர் கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் தெரியப்படுத்தியுள்ளனர்.

சீதுவையிலுள்ள வெளிநாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்யும் தனியார் நிறுவனமொன்று, தீர்வையற்ற களஞ்சியங்களிலிருந்து மீள் ஏற்றுமதி செய்வதற்காக கொண்டு வரப்பட்ட குறித்த வெளிநாட்டு மதுபானங்களான, உயர் ரக விஸ்கி, பிராண்டி, வொட்கா போன்ற 924 மதுபான போத்தல்களுக்குப் பதிலாக அதற்கு சம அளவிலான தண்ணீர்ப் போத்தல்களை நிரப்பி இம்மோசடியை மேற்கொண்டுவந்துள்ளமை,குற்றப்புலனாய்வு பிரிவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த மீள் ஏற்றுமதிக்கான அனுமதியைப் பெற்றிருந்த தனியார் நிறுவனம், அதை சுங்கத் திணைக்களத்தின் பரிசோதகர்களின் மேற்பார்வையின் கீழ் சீதுவையிலுள்ள சுங்கத் தீர்வையற்ற களஞ்சிய சாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அதன்பின் அவற்றை தயார்செய்து மீள் ஏற்றுமதி செய்ய வேண்டும்.

இத்திட்டம் இவ்வாறு இருக்க துறைமுகத்தின் சுங்கத்திலிருந்து எடுத்து வந்த குறித்த மதுபானங்கள், குறித்த நிறுவனம் அமைந்துள்ள சீதுவைக்கு செல்லாது, பேலியகொடை, நுகே வீதியில் உளள இரகசிய களஞ்சியசாலை ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மதுபான போத்தல்களுக்கு பதிலாக, அங்கு ஏற்கனவே தயார் நிலையில் இருக்கும் தண்ணீர் போத்தல்கள் மாற்றப்பட்டு சீதுவைக்கு எடுத்துச் செல்லப்படும் விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யும் இம்மதுபானங்கள் அடங்கிய லொறி வண்டிகள் சீலிடப்பட்டு துறைமுகத்திலிருந்து சீதுவை களஞ்சிய சாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

இவ்வாறு மோசடி செய்யும் லொறிகள் துறைமுகத்தில் சீலிடாமல் வெளியில் கொண்டுவரப்பட்டு நுகே வீதியில் இரகசிய களஞ்சியசாலைக்கு எடுத்துச் சென்றதன் பின் போத்தல்கள் மாற்றப்பட்டு பின் சீலிடப்பட்டு சீதுவைக்கு எடுத்துச் செல்வதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுங்க களஞ்சியத்திலிருந்து இவ்வாறு செல்லும் குறித்த லொறியின் பின்னால் மற்றுமொரு வாகனத்தில் செல்லும், சுங்க அதிகாரிகள் குறித்த இரகசிய இடத்திற்கு சென்று இம்மோசடியை மேற்கொண்டு வருகின்றமை அம்பலமாகியுள்ளது.

சுங்க திணைக்கள பிரதம பணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில் இரகசியப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## எனக்கு எதிராக குரல்... (03 ஆம் பக்கத் தொடர்)

*முன்பிருந்தே வாழ்ந்து வருகின்றார்கள் என்பதற்கு இலக்கியங்கள், தொல்பொருள் கல்வெட்டுக்கள் என பல ஆதாரங்கள் உள்ளன. இதனை ஆதாரங்களுடன் முன்வைத்தேன். பேராசிரியர் ஒருவருடைய கருத்தை முன்வைத்தேன். எங்களுக்கு உள்ள வரலாற்றை இதுவரை காலமும் பேசாமல் இருந்துவிட்டோம். இந்த உண்மைகளை நான் பேசுவது நாட்டைப் பிரிக்க அல்ல. இனப் பிரச்சினையில் இனியாவது சிங்கள மக்கள் விட்டுக்கொடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பில்தான்.*

*அப்படி நடந்தால் இலங்கைத் தீவின் அமைதிக்கு அது வழிவகுக்கும் என்பதுதான் என்னுடைய எதிர்பார்ப்பு.*

*துரதிர்ஷ்டவசமாக எமது தலைவர்கள் எமது வரலாறு பற்றிப் பேசத் தயங்குகின்றார்கள். அவர்களுக்கு எமது வரலாறுபற்றி உண்மையில் தெரியாதா? அல்லது தெரிந்தும் மௌனிகளாக மாறிவிட்டார்களா? என்று எனக்குப் புரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.*

## நாட்டு நலனுக்காகவே... (03 ஆம் பக்கத் தொடர்)

*ஒருவர்தான் எதிர்ப்பினை வெளியிட்டார்.*

*நாட்டுக்கு நல்லது நடக்கும் என்று எதிர்ப்பார்த்தே அதனைக் கொண்டு வந்தோம். ஆனால், எமது எண்ணம் நிறைவேறியதா இல்லை என்பதில் சந்தேகம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*20 ஆவது திருத்தத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதோடு விரைவில் அதனை சபையில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

## அங்கஜனால் இரண்டாம்... (03 ஆம் பக்கத் தொடர்)

*இதன்போது, 113 குடும்பங்களுக்குமான முதலாம் தவணை கொடுப்பனவுகளை பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளரும், யாழ்மாவட்ட அபிவிருத்திகுழு இணைத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் வழங்கி வைத்தார். இந் நிகழ்வில் யாழ் அரச அதிபரும் யாழ் ஒருங்கிணைப்பு சபையின் செயலாளருமான கணபதிபிள்ளை மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. எஸ்.நிக்கொலஸ்பிள்ளை, வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் மு.ரவீந்திரன், வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள், அரச அலுவலர்கள், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.*

## சூரியன் இன்று மதியம்... (03 ஆம் பக்கத் தொடர்)

*இன்று (07) வரையும் இலங்கைக்கு நேரே வெவ்வெறு பிரதேசங்களுக்கு உச்சம் கொடுக்கின்றது.*

*அந்த வகையில் இவ்வருடத்தின் இறுதி நாளான இன்று கிந்தொட்டை, கல்வெலவத்த, கல்லேல்ல, அத்துரலிய கஹந்த மோதர ஆகிய பிரதேசங்களுக்கு உச்சம் கொடுக்கும் என்றும் குறிப்பிட்டார்.*

## கொரோனாவிலிருந்து... (03 ஆம் பக்கத் தொடர்)

*இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் இதுவரை 12 பேர் மரணித்துள்ளது குறிப்பிடத்தக்கது.*

## தோட்ட அதிகாரியை... (03 ஆம் பக்கத் தொடர்)

*அத்தோட்ட அதிகாரியை உடனடியாக இடமாற்ற கோரி ஆர்ப்பாட்டத்தில் குதித்துள்ளனர். குறித்த அதிகாரி அத்தோட்ட தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக பல கெடுபிடிகளை செய்து வருவதாக போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் பலர் குற்றம் சுமத்துகின்றனர். அத்தோட்டஅதிகாரிக்குஎதிராக5.9.2020 சனிக்கிழமை காலை அணிதிரண்ட அத்தோட்ட தொழிலாளர்கள் அத்தோட்ட தேயிலை தொழிற்சாலைக்கு அருகாமையில் பதாதைகளையும் சுலோகங்களையும் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.*

# 20ஆவது திருத்தத்தை பொது மக்களின் வாக்கெடுப்பின்றி நிறைவேற்ற முடியும்

- அமைச்சர் கெஹெலிய

**எம்.ஏ.அமீனுல்லா**



அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை பொது மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்குச் செல்லாமல் நிறைவேற்ற முடியும் என்று சட்டமா அதிபர் திணைக்களம் உறுதி அளித்துள்ளதாகவும் அதற்காக யாராவது நீதிமன்றம் செல்ல விரும்பினால் அதற்கும் அரசியலமைப்பில் இடம் வழங்கப்பட்டுள்ளது எனவும் ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கண்டியில் வைத்து தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (05) கலகேதர பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பாடடதாரிகளுக்கு நியமனம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்ட அமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய, ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல.

அரசியலமைப்பு தொடர்பான சிறந்த முன்னெடுப்புக்களுக்கும் அதுதொடர்பிலான நலன்களுக்கும் பல்வேறு விமர்சனங்கள் உருவாகலாம். ஆனால் அவ்வாறான விமர்சனங்களுக்கு செவிசாய்க்காமல் அரசாங்கம் முன்னேறி வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அதாவது, அரசியலமைப்பின் திருத்தத்தை நிராகரித்த கட்சிகள் மற்றும் குழுக்களின் கருத்துக்கள் எதுவாக இருந்தாலும், 19 ஆவது திருத்தத்தை நீக்கி, 20 ஆவது திருத்தத்தை விரைவில் கொண்டுவர மக்கள் மூன்றில் இரண்டு பங்கு ஆணையை அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளனர். அதன்படி, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுத்துள்ளது எனவும் குறிப்பிடடார்.

தொடர்ந்துறையற்றிய அமைச்சர், 20 வது திருத்தம் மற்றும் அது தொடர்பான திருத்தங்களின் உள்ளடக்கம் குறித்து நியாயமான விமர்சனத்திற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. 19 ஆவது திருத்தம் ஒரு குடும்பத்தை இலக்காகக் கொண்டது என்பதையும், அவர்களின் அரசியல் வாழ்க்கையைத் தடுக்கப்படுகின்ற முறைமைகள் பற்றிய சதியை நாடு அறிந்திருப்பதாகவும், அத்தகைய குறுகிய நோக்கங்கள் இல்லாமல் நாட்டின் முன்னேற்றத்திற்காக மட்டுமே 20 ஆவது திருத்தம் இருக்கும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலை கழிவுகளால் சுகாதார சீர்கேடு

### ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

எம்பிலிப்பிட்டிய அரச வைத்தியசாலையின் கழிவு பொருட்கள் முறையான விதத்தில் அகற்றப்படாமையினால் பொது மக்கள் சுகாதார வைத்திய சீர்கேடுகளை எதிர்கொண்டு வருவதாக பொதுமக்கள் முறையிடுகின்றனர். வைத்தியசாலையிலிருந்து வெளியாகும் கழிவு நீரும் அதனோடிணைந்ததாக வெளியேறும் வைத்தியசாலை கழிவுகளும் பின்புறமாகவுள்ள வாய்க்கால்களின் மூலம் வடிந்தோடி வயல் நிலங்களையடைவதால் இம் முறைகேடுகள் இடம்பெறுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

வைத்தியசாலையின் கழிவுப் பொருட்களான குப்பைகள், சேலைன் பிளாஸ்டிக் போத்தல்கள், தடுப்பூசி குழாய்கள், தடுப்பூசிகள், பஞ்சுக் கழிவுகள், இரசாயன கழிவுகள், போத்தல்கள் வீதியோரத்தில் உள்ள காண்களின் மூலம் உடவளவை நீர்த்தேக்கம், சந்திரிக்காவெவ ஆகியவற்றுக்கும் அயலில் உள்ள வயல் நிலங்கள், விவசாய நிலங்களையும் சென்றடைவதால் இப்பாரிய சீர்கேட்டை எதிர் கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயமாக எம்பிலிப்பிட்டிய நகர சபை, பிரதேச சபை ஆகியவற்றுக்கும் ஏனைய பொது அமைப்புகளுக்கும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை முறையான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமையினால் இப்பகுதி பொதுமக்கள் தொடர்ந்து தொற்று நோய் அச்சுறுத்தல்களையும் நீண்டகால சுகாதார பாதிப்புகளையும் எதிர்கொண்டுள்ளதாக அவர்கள் தெரி விக்கின்றனர்.

## இரத்தினபுரி வரை புகையிரத சேவையை நீடிக்க பேச்சுவார்த்தை

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இதுவரை அவிசாவளை வரை இருந்து வரும் புகையிரத சேவையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இரத்தினபுரி மாவட்ட இணைப்புக் குழு தலைவருமா அகில சாலிய எல்லாவள நேற்றுத் இத்தகவலை தெரிவித்தார்.

இதற்கிணங்க தற்போது கொழும்பு அவிசாவளை வரை நடைபெற்று வரும் களனி வெளி புகையிரத சேவையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்கான அமைப்பு இவ்விடயமாக பாராளுமன்ற உறுப்பினருடன் முதற்கட்ட கலந்துரையாடலில் நேற்று ஈடுபட்டுள்ளது.

இக்கலந்துரையாடியதுடன் இரண்டாம் கட்டப் பணிகளை முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி புகையிரத சேவையை நீடிப்பதற்கு இப்பிரதேச பொது மக்களும் ஆர்வத்துடன் இருப்பதனால் கலந்துரையாடலின் முடிவுகளை அரச உயர் மட்டத்துக்கு முன்வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



"முரண்பாட்டின் நிலைமாற்றத்திற்காக இடம்பெற்றுவரும் பல் மட்ட பங்காளிகளின் நடவடிக்கைகள்" என்ற விடயம் தொடர்பாக சர்வமத அமைப்பின் அங்கத்தவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. இதனை தேசிய சமாதான சபையும் கண்டி மாவட்ட சர்வ மத அமைப்பும் இணைந்து கண்டி டெவோன் விடுதியில் நடத்தியது. தேசிய சமாதான சபையைச் சேர்ந்த சமன் செனவிரத்ன, ரஸிகா செனவிரத்ன மற்றும் கண்டி சர்வமத அமைப்பைச் சேர்ந்த காமினி ஜயவீர ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். பல்வேறு சமயங்களைச் சேர்ந்த மதத்தவைர்களும் இதில் கலந்து கொண்டனர்.
அக்குறணை குறூப் நிருபர்

## களுத்துறை மாவட்டத்தில் மண்சரிவு எச்சரிக்கை

**களுத்துறை சுழற்சி நிருபர்**



களுத்துறை மாவட்டத்தின் பாலிந்தநுவர பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மோல்க்காவ கொஸ்குலன கிராம அலுவலகர் பிரிவில் மலைப்பாங்கான பகுதியில் இருந்து பாரிய கல் ஒன்று சரிந்து விழுந்துள்ளது.

இதன் காரணமாக அம் மலைப் பிரதேசத்தின் கீழ்ப் பகுதியில் வசிக்கும் 13 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 45 பேரின் பாதுகாப்பு கருதி தற்காலிகமாக கொஸ்குலன பாடசாலை மற்றும் விகாரையில் தங்க வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனை களுத்துறை அனர்த்த முகாமைத்துவ பொறுப்பதிகாரி பிரதிப் பணிப்பாளர் கேர்ணல் சுஜித் குலசேகர தெரிவித்தார்.

இப் பகுதி 2017ஆம் ஆண்டில் தேசிய புவிச்சரிதவியல் மற்றும் கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஏற்கனவே மண் சரிவு அபாயம் காணப்படுவதாக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் இப் பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையின் காரணமாக மேலும் மண் சரிவு மற்றும் கற்பாறைகள் சரிந்து விழும் அபாயம் காணப்படுவதால் ஏற்படும் விபரீதங்கள் தவிர்த்துக் கொள்ளும் நோக்கில் மேற்படி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

## காட்டு யானைகளினால் பலாங்கொடையில் விவசாய நடவடிக்கைகள் பாதிப்பு

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை பிரதேச சபை எல்லைப்பகுதியில் உள்ள வடவல, முல்கமவிகிலிய, ரஜவகபோவத்த, ஹெல போவத்த ஆகிய பிரதேசங்களுக்கு வருகை தருகின்ற காட்டுயானைகள் இரவு நேரங்களில் பாதைகளிலும் மற்றும் குறுக்கு பாதைகளிலும் நடமாடுவதால் இப்பகுதி பொது மக்கள் பெரும் அச்சுறுத்தலுக்கு ஆளாகி வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாலை நேரங்களில் இருளடைந்த வேளையில் கிராமங்களுக்கு வருகின்ற காட்டுயானைகள் அதிகாலை வரை விவசாய பயிர்களை நாசம் செய்து விட்டு கிராமங்களிலும் பாதைகளிலும் நடமாடுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.


15 யானைகள் அளவில் கூட்டமாக இந்த கிராம பகுதிகளில் இரவு நேரங்களில் நடமாடுவதால் பொதுமக்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேசமயம் அதிகாலையில் தூர இடங்களுக்கு பயணம் செய்ய பஸ் வண்டிகளை எதிர்பார்த்து பிரதான பாதைக்கு நடந்து வருகின்ற மக்கள் கூட இந்த யானைகள் பாதையில் இருப்பதால் ஆபத்தான நிலைமையை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

காட்டு யானைகளின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை இக் கிராம பாதைகளில் இரு பக்கங்களிலும் மின் விளக்குகளை பொருத்தி தருமாறு பிரதேச சபையின் தலைவரை பொதுமக்கள் வேண்டியுள்ளனர்.

இது விடயமாக பலாங்கொடை பிரதேச சபை தலைவர் சுனில் பேமசிரியிடம் வினவிய போது தெரிவித்ததாவது, இந்த காட்டு யானைகள் சம்பந்தமாக பிரதேச சபைக்கு பொதுமக்கள் புகார் செய்துள்ளனர்.

இது விடயமாக இரத்தினபுரி மாவட்ட இணைப்புக்கமிட்டி கூட்டத் தலைவர் அகில சாலிய எல்லாவளவுக்கு முன் வைத்து நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் அதேசமயம் காட்டு யானைகளின் பிரச்சினைகள் அதிகமாக உள்ள ரஜவக பிரதேசத்தில் வனப்பாதுகாப்பு உப காரியாலயம் ஒன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார்.



மத்துகம கணபதி அறநெறி பாடசாலையின் இறுவட்டு வெளியீட்டு விழா ஆசிரியை ரஞ்சனி சுரேஸின் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது அவருக்கு ஆசிரியர் உதயா உட்பட ஆசிரியைகள் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கி கௌரவிப்பதை படங்களில் காணலாம்.
படங்கள்: கே.ஈஸ்வரலிங்கம்

## பிரதேச சபை தலைவர் பயணித்த வாகனம் விபத்து

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

அக்கரபத்தனை பிரதேசசபை தலைவர் பயணித்த வாகனம் சுமார் 75 பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்,

தலவாகலை டயகம பிரதான வீதியின் மன்ராசி பகுதியிலே நேற்று முன்தினம்( 05 ) இரவு 10 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

பிரதேச சபை தலைவர் தனது வீட்டிற்கு சென்றுகொண்டிருந்த போதே சாரதியின் கட்டுப்பாட்டை மீறீ பள்ளத்தில் பாய்ந்துள்ளது.

விபத்துக்குள்ளான பிரதேச சபைக்கு சொந்தமான ஜீப் ரக வாகனமானது கடும் சேதமாகியுள்ளதுடன் சபைத்தலைவர் கதிர்ச்செல்வன் மற்றும் சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர் ,

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை அக்கரபத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்,

## பதுளை தெமோதரையில் ஆணின் சடலம்

**லுணுகல நிருபர்**

பதுளை தெமோதரை சௌதம் தோட்டப்பகுதியில் அமைந்துள்ள குளத்தில் ஆணின் சடலம் ஒன்று நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளதாக எல்ல காவல்துறையினர் தெரிவித்துள்ளனர் .

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, நேற்று அதிகாலை குளத்தில் சடலம் மிதப்பதை கண்ட பிரதேச மக்களால் எல்ல பொலிசாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது .

இவ்வாறு உயிரிழந்தவர் 74 வயதுடைய பெரியம்மன் பெரியான் எனவும் சடலம் பிரேத பரிசோதனைக்காக பதுளை மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது .

### கொடக்கவெல பஸ் விபத்து:

## இளைஞனின் வேறான கையை பிணைக்க சத்திர சிகிச்சை

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பஸ் விபத்தில் மணிக்கட்டுடன் வேறாகிய இளைஞனின் கையின் பகு தியைப் பிணைக்க இரத்தினபுரி அரச வைத்திசாலை வைத்தியர்கள் பெரும் பிரயத்தனத்தில் ஈடுபட்டு வருவதாக இரத்தினபுரி அரச வைத்தியசாலை சத்திர சிகிச்சைப் பிரிவின் வைத்தியர்கள் நேற்று தெரிவித்தனர்.

இரத்தினபுரி எம்பிலிப்பிட்டிய வீதியில் கொடக்கவெல கலஹிட்டிய பகுதியில் இவ்விபத்து இடம்பெற்று ள்ளது.

கொழும்பு பதுளை வீதியில் மொனராகலையிலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டியும் இரத்தினபுரிபுரியிலிருந்து எம்பிலிப்பிட்டிய நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் வண்டியும் மோதியதால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இவ்விபத்தின் போது இ.போ.ச பஸ் வண்டி தனியார் பஸ் வண்டி மீது மோதியதால் இவ்விபத்து இடம் பெற்றதாகவும் பொலிசார் தெரிவி த்தனர்.

தனியார் பஸ் வண்டியின் பின் ஆசனத்தின் வலதுபக்க மூலை ஜன்னலில் கையை வைத்தவாறு இளைஞன் பயணித்துள்ளதாகவும் இ போ.ச.பஸ் வண்டி தனியார் பஸ் மீது மோதியதால் யன்னலில் தனது கையை வைத்திருந்த இளைஞனின் கை பாதிப்புக்குள்ளாகி துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் பொலீசார் தெரிவித்தனர்.

கையை இழந்தவர் கொடக்கவெல பிரதேசத்தை சேர்ந்த 20 வயதான இளைஞர் எனவும் கஹவத்தைப் பொலிசார் இ.போ.ச. பஸ் வண்டியின் சாரதியை கைது செய்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

# அங்கஜன் இராமநாதன் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் ஆய்வு



யாழ்ப்பாணம் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் முன்னேற்றம் குறித்து பாராளு மன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் கள ஆய்வு மேற் கொண்டார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் கடந்த 4ம் திகதி நடைபெற்ற முதலீட்டாளர்களின் கலந்துரை யாடலை தொடர்ந்து இந் நடவ டிக்கையை அவர் மேற்கொண்டுள் ளார்.

இதன்மூலம் யாழ் மாவட்டத் தின் முதலீட்டாளர்களை அதிக ரித்து யாழ்.மாவட்டத்தில் பொரு ளாதார முன்னேற்றம் மற்றும் வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கப் பட முடியும் எனவும் குறிப்பிட் டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

இங்குள்ள முதலீட்டு நிறுவனங் களின் குறைபாடுகளை ஆராய்ந்து தேவைப்பாடுகள் சம்மந்தமாக உரிய அமைச்சுகளுடன் கலந்து ரையாடி தீர்வுகள் எட்டப்படும். இதன் ஊடாக உள்ளூர் முதலீட்டா ளர்களுடன் வெளிநாட்டு முதலீட் டாளர்களையும் இணைத்து யாழ் மாவட்டத்தில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வைப்பதன் ஊடாக வேலைவாய்ப்புக்களையும் உரு வாக்க முடியும். அத்துடன் சரித்து வரும் எமது பொருளாதாரம் அனைத்து துறைகளின் ஊடாக முன்னேற்றம் அடையவேண்டும் என்றார்.

## கரைச்சி பிரதேச சபை

# ஆதன வரியை குறைக்காவிடின் மக்களை திரட்டி போராட்டம்

### சமத்துவ கட்சி உறுப்பினர்கள்

**கிளிநொச்சி குறூப் நிருபர்**





கரைச்சி பிரதேச சபையால் அற விடப்படவுள்ள அதிகரித்த ஆதன வரியை மக்களின் நலன் கருதி குறைக்காது விடின் பாதிக்கப்ப டவுள்ள மக்களை ஒன்றுதிரட்டி வெகுஜன போராட்டம் மேற் கொள்ளப்படும் என கரைச்சி பிரதேச சபையின் சமத்துவக் சட்சி உறுப்பி னர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் உள்ள கட்சி அலு வலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ளான த.மோகன்ராஜ், த.ரஜனிகாந், கப்பிரயல் லோறன்ஸ், இ.இளங்கோ ஆகியோர் இவ்வாறு தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் கூறுகையில்,

கிளிநொச்சி மாவட்டம் வறுமை யில் முன்னிலையில் இருக்கிறது. பெரும்பாலான மக்கள் மூன்று வேளை உணவு உண்ணுவதே கேள் விக்குறியாகவுள்ளது. யுத்தத்தின் பாதிப்புக்களை முழுமையாக எதிர் கொண்டுபடிப்படியாகமீண்டுவரும் மாவட்டமாக காணப்படுகிறது.

இப்படியான ஒரு மாவட்டத்தில் புதிதாக ஆதனவரி அறவிடுகின்ற போது எடுத்த எடுப்பிலேயே பத்து வீதம் என்கின்ற அதிகரித்த வீதத் தில் அறவிடுவது மக்களை பெரும் சுமைக்குள் தள்ளிவிடும்.

மேலும் புதிதாக ஆதனவரி அற விடுவதற்கு மக்களின் ஆதனங்க ளின் மதிப்பீடுகள் தற்போதைய சந்தை பெறுமதியில் மதிப்பிடப் பட்டது.

எனவே சொத்துக்களின் பெறுமதி யும் தற்போதைய சந்தை பெறுமதி யில் அதிகரித்து காணப்படும் இந்த நிலையில் இந்த அதிகரித்த பெறும திக்கு அதிக வீதத்தில் வரி அறவிட் டால் அது மக்களை மேலும் நெருக் கடிக்குள் தள்ளிவிடும்.

இதனை அந்த மக்களின் பிரதிநிதி கள் என்ற வகையில் நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபையா னது மக்களுக்கானதாக இருக்க வேண்டுமே தவிர மக்களுக்கு எதி ரானதாக இருக்க கூடாது. ஆனால் கரைச்சி பிரதேச சபையின் செயற்பா டுகள் மக்கள் நலன்களுக்கு அப்பால் கட்சி நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

தன்னிச்சையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது. கரைச்சி பிரதேச சபை இதனை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையெனில் நாம் மக்களை திரட்டி வெகுஜன போராட்டத்தை மேற்கொள்வோம் என்றார்.

# குப்பைகளை தரம் பிரிக்காத 7 பேருக்கு எதிராக வழக்கு

**த.சுபேசன்**

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குள் குப்பைகளை தரம் பிரிக்காது வீதிகளில் போட்ட 7நபர்களுக்கு எதிராக சாவகச்சேரி பொலிசார் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி நகரசபையினர் செப்டம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் தரம் பிரித்து வைக்கும் கழிவுகளை மாத்திரமே தமது வாக னங்கள் ஊடாக அகற்றி வருகின்ற னர். அந்த நடைமுறையைப் பின்பற் றாது சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் வீதியில் குப்பைகளைப் போட்ட 7பேர் மீது பொலிசார் வழக் குத்தாக்கல் செய்துள்ளனர்.

தரம் பிரித்து கழிவுகளை அகற்றும் செயற்பாடு 80 சதவீதம் வெற்றிய ளித்திருப்பதாகவும், பெரும்பாலான பொதுமக்கள் அதனை கடைப் பிடித்து வருவதாகவும் நகரசபை யின் சுகாதாரப் பிரிவினர் தெரிவித் துள்ளனர்.

தற்போது சாவகச்சேரி நகரசபை யுடன் வேள்ட் விசன் நிறுவனம் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் மூன்று வருட கால செயற்திட்டத் தில் இணைந்து செயற்பட்டு வரு வதனால் எதிர்காலத்தில் சிறப்பாக கழிவு முகாமைத்துவத்தினை அபிவி ருத்தி செய்ய முடியும் என நகரசபை உறுப்பினர்கள் நம்பிக்கை தெரிவித் துள்ளனர்.

# புதையல் தோண்டிய பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட 8 பேர் கைது

### வவுனியாவில் சம்பவம்

**பா.சதீஸ்**



வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அரபா நகர் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட 8பேரை கைது செய்துள் ளதாக பூவரசங்குளம் பொலிசார் தெரிவித்தனர். இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் அரபாநகர் பகுதியி லுள்ள காணியொன்றில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டு வருவதாக பூவரசங்குளம் பொலிசாருக்கு இரகசிய தகவல் கிடைத்திருந்தது. இதனையடுத்து அங்கு சென்ற பொலிசார் 08 பேரை கைது செய்துள்ளனர்.

சம்பவத்தில் கொழும்பு, வவுனியா உட்பட பல்வேறு பகுதிகளை சேர்ந் தவர்களே கைது செய்யப்பட்டுள்ள துடன், அவர்களிடமிருந்து நிலத்தை தோண்டுவதற்கு பயன்படும் மண் வெட்டி உட்பட சிலபொருட்களை யும், இரண்டு சொகுசுகார்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் ஒருவர் பொலிஸ் உத்தியோகத் தராக கடமையாற்றி வருவதாக தெரிவித்த பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மோட்டார் சைக்கிள் - டிப்பர் விபத்து குடும்ப பெண் ஸ்தலத்தில் பலி

**த.சுபேசன்**



யாழ்.சாவகச்சேரி ஏ 32 வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் சம்பவ இடத்தில் பலி யாகியுள்ளார்.

சாவகச்சேரி தனங்கிளப்பு அறுகு வெளிப் பகுதியில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ் விபத்தில் உரும்பிராயை சேர்ந்த 47 வயதான துசாந்தி என்ற குடும்ப பெண்ணே உயிரிழந்தவராவார்.

சங்குப்பிட்டிப் பகுதியிலிருந்து நாவற்குழி நோக்கி வந்த டிப்பரு டன் நாவற்குழிப் பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் வந்த பெண் மோதியதில் இவ் விபத்து சம்ப வித்துள்ளது. பெண் பயணித்த மோட்டார் சைக்கிள் சடுதியாக வீதியை விட்டு விலகி டிப்பருடன் மோதுண்டதாகத் தெரிவிக்கப்ப டுகிறது.

விபத்தில் இறந்த பெண்ணிற்கு ஏற்கனவே ஒரு கால் இல்லை என் பதும் குறிப்பிடத்தக்கது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணை களை சாவகச்சேரி பொலிசார் முன் னெடுத்து வருகின்றனர்.

# இறைச்சிக்காக கடத்தப்பட்ட மாடுகள் மீட்பு - வவுனியாவில் சம்பவம்



**வவுனியா நிருபர்**

வவுனியா நெடுங்கேணியில் இருந்து மதவாச்சி நோக்கி இறைச் சிக்காக கடத்திச் செல்லப்பட்ட 11 மாடுகளை மடுக்கந்த பொலிசார் மீட்டுள்ளனர்.

குறித்த மாடுகள் நெடுங்கேணி யிலிருந்து மாமடுப் பகுதியூடாக மதவாச்சி நோக்கி கொண்டு செல் லப்படவிருந்த நிலையில் நேற்று அதிகாலை மடுகந்தைப் பகுதி யில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் அவற்றை மீட்டுள்ளனர்.

அனுமதிப்பத்திரம் இன்றி முறையான நடைமுறைகளை பேணாமல் குறித்த மாடுகள் கொண்டுசெல்லப்பட்டிருந்ததாக தெரிவித்த பொலிசார் அவற்றை கடத்திச்செல்ல பயன்படுத்தப் பட்ட கப் வாகனத்தையும், இரண்டு நபர்களையும் கைதுசெய்துள்ளதாக தெரவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசா ரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பி டத்தக்கது.

# அம்புலன்ஸ் வண்டி விபத்து





**ஜெகதீஸ்**

வடமராச்சி குஞ்சர் கடையடி யில் அம்புலன்ஸ் வண்டியொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. அம் புலன்ஸ் வண்டியின் டயர் காற்று போனதன் காரணமாக வீதியை விட்டு விலகி மயில்கல் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனால் வாகனத்தின் முன்பகுதி பெரும் சேதமடைந்துள்ளது. பருத்தித்துறை ஆதார வைத்தியசா லைக்கு சொந்தமான அம்புலன்ஸ் வண்டியே இவ்வாறு விபத்துக் குள்ளாகியது. நேற்று அதிகாலை யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித் துறை நோக்கி வந்து கொண்டிருந்த போது இச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

# 14 எருமை மாடுகளை கடத்திய லொறி சாரதி, நடத்துனர் கைது

**வவுனியா விசேட நிருபர்**





வவுனியா நெளுங்குளம் பகுதியில் 14 எருமை மாடுகளை ஏற்றி வந்த லொறி ஒன்றினை பொலிசார் பிடித்துள்ளது டன் சம்பவம் தொடர்பாக லொறியின் சாரதி மற்றும் நடத்துனரை கைது செய் துள்ளனர்.

மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி அனும திப்பத்திரமின்றி எருமை மாடுகளை ஏற்றி வருவ தாக வவுனியா மாவட்ட போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த லொறியினை மடக்கி பிடித்துள்ள னர்.

அனுமதிப்பத்திரமின்றி எருமை மாடுகளை ஏற்றிச் சென்ற லொறியினை பொலிசார் கையகப் படுத்தியதுடன் லொறியின் சாரதி மற்றும் நடத்துனரையும் கைது செய் தனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் வவுனியா புளித்தரித்தபுளியங்குளம் பகுதியினை சேர்ந்தவர்களாவார்கள்.

கைது செய்யப்பட்ட நபர்களை வவுனியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிசார் நடவ டிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# மன்னாரில் 'சௌபாக்கிய' இலக்கு மூன்று மடங்காக அதிகரிப்பு

### விவசாய பணிப்பாளர் தகவல்

**தலைமன்னார் நிருபர்**

மன்னாரில் 'சௌபாக்கிய' திட்டத் தின் கீழ் 300 ஹெக்ரயரில் பயிர்ச் செய்கை செய்வதற்கு இலக்கு வைக்கப்பட்ட போதும் தற்போது அது மூன்று மடங்காக அதிகரித்துள் ளதாக மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

மன்னார் மாவட்டத்தில் 2020 ஆம் ஆண்டின் சிறுபோகப் பயிர் செய் கையில் விஷேடமாக சௌபாக்கியா திட்டத்தின் கீழ் உப உணவுப் பயிர் செய்கை ஊக்குவிக்கப்பட்டு 300 ஹெக்ரயர் என இலக்கு வைக்கப்பட் டது. எனினும் தற்போது இவ் அடை வுமட்டம் மூன்று மடங்காக அதிக ரித்துள்ளது.

பத்தாயிரம் விதைப் பக்கெற்கள் 20 ரூபா வீதம் விநியோகிக்கப் பட்டு வீட்டுத் தோட்ட செய்கை களும் ஊக்குவிக்கப்பட்டுள்ளது என்றார்.



தேர்தலில் கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் சிறுப் பிட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சு மந்திரன், அவரது மனைவி மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனா திராசா ஆகியோர் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம். படம் கரவெட்டி தினகரன் நிருபர்

# வீதியில் முறிந்து விழும் நிலையில் மரம்


**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் கடந்த சில நாட் களாக பலத்த காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலை நிலவுவதால் வீதி யோரத்திலுள்ள பழமை வாய்ந்த மரங்கள் முறிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குருமன்காடு புகையிரத நிலைய வீதியில் வீதியோரங்களில் காணப் படும் பழமைவாய்ந்த சில மரங் கள் பட்டுள்ளதுடன் சரிந்து விழும் நிலையில் காணப்படுகின்றன. வவுனியாவில் பலத்த காற்று வீசி வருகின்ற நிலையில் அம் மரங்கள் சரிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள் ளதுடன் குறித்த வீதியூடாக தினசரி ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பயணித்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி அம் மரங்களை தறித்து அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். சீரற்ற காலநிலை கார ணமாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் முல்லைத்தீவில் மரம் முறிந்து வீழ்ந்ததில் இரு இளைஞர் கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# மெல்போர்ன் முடக்க நிலை மேலும் 2 வாரங்கள் நீடிப்பு



கொரோனா வைரஸ் தொற்று சம்பவங்கள் போதுமான அளவில் குறையாததால் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் கடைப்பிடிக்கப்படும் கடுமையான முடக்க நிலை இன்னும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்படும் என்று நிர்வாகம் அறிவித்துள்ளது.

சில தளர்வுகளுடன் வரும் செப்டெம்பர் 28 ஆம் திகதி வரை கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கும் என்று விக்டோரியா மாநில தலைவர் டானியல் அன்ட்ரூஸ் தெரிவித்துள்ளார்.

ஒப்டோபர் மாதம் தொடக்கம் இந்தக் கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்படும். அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற இரண்டாவது அலை வைரஸ் தொற்றின் மையமாக மாறிய இந்த மாநிலத்தில் மொத்த உயிரிழப்பான 753 இல் 90 வீதமான சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

26 மில்லியன் மக்கள் தொகை கொண்ட அவுஸ்திரேலியாவில் மொத்தம் 26,000க்கும் அதிகமான நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதில் நோய்த் தொற்று சம்பவங்கள் அதிகரித்ததை அடுத்து கடந்த ஜூலை 9 ஆம் திகதி மெல்போர்ன் நகரில் இரண்டாவது முடக்கநிலை அமுல்படுத்தப்பட்டது. கடைகள் மற்றும் வர்த்தகங்கள் மூடப்பட்டு 5 கிலோமீற்றர் தூர பயணக் கட்டுப்பாடு மற்றும் இரவு நேர ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

பெய்ரூட் வெடிவிபத்து:

# யாரும் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை என அறிவிப்பு



லெபனானின் பெய்ரூட் நகரில் வெடிவிபத்தால் இடிந்த கட்டடம் ஒன்றில் யாரேனும் சிக்கியிருக்கக் கூடும் என சந்தேகம் எழுந்த நிலையில், 3 நாட்கள் தேடுதலுக்கு பின் யாரும் உயிருடன் சிக்கியிருக்க வாய்ப்பில்லை என மீட்பு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

191 உயிர்களை பலிகொண்ட பெய்ரூட் வெடிவிபத்து நிகழ்ந்து ஒரு மாதம் ஆன போதும் 7 பேர் மாயமானோர் பட்டியலில் நீடிக்கின்றனர்.

புதனன்று சிலி மீட்பு குழுவினரின் மோப்பநாய் சிதைந்த கட்டிடம் ஒன்றின் அடியில், யாரேனும் சிக்கியிருக்கக் கூடும் என்பது போல் அந்த பகுதியை வட்டமடித்தது.

இதையடுத்து உயர்தொழில்நுட்ப சென்சார் மூலம் ஆய்வு செய்த போது, இதயதுடிப்பு இருப்பதற்கான சமிக்ஞைகளை காட்டியதால் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டது.

இடிபாடுகளை அகற்றி தீவிரமாக தேடியும் அங்கு யாருமில்லாததால் 3 நாட்களுக்குப் பின் அங்கு யாரும் உயிருடன் சிக்கியிருக்க வாய்ப்பில்லை என மீட்பு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# பங்களாதேஷில் பள்ளிவாசல் வெடி விபத்தில் 24 பேர் பலி



பங்களாதேஷில் பள்ளிவாசல் ஒன்றுக்கு அருகில் எரிவாயுக் குழாய் வெடித்த சம்பவத்தில் தொழுகை முடிந்து செல்லும் 24 பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

தலைநகர் டாக்காவுக்கு வெளியே உள்ள நரயங்காஜ் மாவட்டத்தில் பள்ளிவாசல் ஒன்றில் வெள்ளிக்கிழமை இரவு குழாய் ஒன்றில் ஏற்பட்ட கசிவே இந்த வெடிப்புக்குக் காரணம் என்று தீயணைப்புச் சேவை அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

இதில் கடும் தீக்காயங்களுக்கு உள்ளான பலர் அவசரமாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை மாலையாகும்போது ஏழு வயது சிறுவன் உட்பட இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் பலர் கவலைக்கிடமான நிலையில் இருக்கும் சூழலில் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று மருத்துவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

சமையல் எரிவாயு குழாய் இணைப்பில் கசிவு ஏற்பட்டு, பள்ளிவாசலுக்குள் அந்த வாயு சூழ்ந்திருக்கலாம் எனவும், அதன் காரணமாக பள்ளிவாசலுக்குள் இருந்த குளிரூட்டு சாதனங்கள் அடுத்தடுத்து வெடித்துச் சிதறியதாகவும் கூறப்படுகிறது.

# ஆப்கான் அமைதி பேச்சுக்காக தலிபான் குழு கட்டார் பயணம்

நீண்ட காலமாக தாமதித்து வரும் ஆப்கான் அரசுடனான பேச்சுவார்த்தையை விரைவில் ஆரம்பிப்பதற்கான ஒரு சமிக்ஞையாக தலிபான்களின் பேச்சுவார்த்தைக் குழு கடந்த சனிக்கிழமை கட்டாரை சென்றடைந்தது.

தோஹா நகரில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைக்கான திகதி இன்னும் நிர்ணயிக்கப்படாதபோதும் அது விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று போர் புரியும் இரு தரப்புகளும் கூறியுள்ளன. குறிப்பாக இரு தரப்புக்கும் இடையிலான கைதிகள் பரிமாற்ற முயற்சிகள் இடம்பெற்று வரும் நிலையில் இதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது.

“எமது பேச்சுவார்த்தைக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் கட்டாரை சென்றடைந்துள்ளனர். சில சிறிய பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட பின் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும்” என்று தலிபான் பேச்சாளர் சுஹைல் ஷஹீன் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சிறப்பு தூதுவர் சல்மே கலீல்சாத் கடந்த வெள்ளிக்கிழமை தோஹாவை சென்றடைந்திருப்பது



பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கான மற்றொரு சமிக்ஞையாக உள்ளது.

“போரை முடிவுக்குக் கொண்டு வந்து நிலையாக வன்முறையை குறைத்து, அரசியல் தீர்வொன்றுக்காக ஆப்கான் மக்கள் தயாராக உள்ளனர்” என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் ஆப்கான் அரச பேச்சாளர்கள் தொடர்ந்தும் காபுல் நகரில் இருந்தபோதும் அதன் ஏற்பாட்டுக் குழு ஒன்று கடந்த வாரம் தோஹா நகரை சென்றடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

“கைதிகள் விடுதலை பூர்த்தியாகி இருக்கும் நிலையில் பேச்சுவார்த்தையை தாமதிப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை” என்று ஆப்கான் அரசின் சார்பில் பேசவல்ல பாரைதூன் கவ்சூன் குறிப்பிட்டுள்ளார்.

# நைகரில் 70 பேர் கொலை: இராணுவம் மீது குற்றச்சாட்டு

நைகரில் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கையின்போது இராணுவத்தால் பொதுமக்கள் பலரும் கொல்லப்பட்டிருப்பதாக தேசிய மனித உரிமை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் வடமேற்கில் உள்ள டிலபரியாவில் ஆறு பாரிய மனிதப் புதைகுழிகளில் 70க்கும் அதிகமான சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அது குறிப்பிட்டுள்ளது. இது ஜிஹாதிக்களின் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பகுதியாகும்.

இந்த ஆண்டு ஆரம்பத்திலேயே இந்தக் கொலைகள் இடம்பெற்றிருப்பதாக குற்றம்சாட்டப்படுகிறது.

கூறிய ஆயுதங்கள் மற்றும் சிறு துப்பாக்கிகளால் பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதாக விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

சஹல் பிராந்தியத்தில் ஜிஹாதிக்கள் மற்றும் ஏனைய ஆயுதக் குழுக்களுக்கு எதிராக நைகர், மாலி மற்றும் புர்கினோ பாசோ இராணுவங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நீதிக்கு அப்பால் கொலைகள் இடம் பெறுவதாக சர்வதேச உரிமைக் குழுக்கள் குற்றம்சாட்டி வருகின்றன.

கடந்த மார்ச் 27 தொடக்கம்



ஏப்ரல் 2 வரையான காலப்பகுதியில் இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் பதற்றம் கொண்ட பிராந்தியத்தில் 102 பொதுமக்கள் காணாமல்போனது பற்றி நைகரின் தேசிய மனித உரிமை ஆணைக்குழு விசாரணை நடத்தியது.

“நிராயுதபாணியான பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதோடு இந்த விசாரணையில் ஆறு புதைகுழிகளில் குறைந்தது 71 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன” என்று இந்த விசாரணையில் அங்கம் வகித்த அமைதி, ஜனநாயகம் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றிணைந்த ஆபிரிக்க வலையமைப்பின் தலைவர் அப்துலயே செய்யிது தெரிவித்துள்ளார்.

# பிரான்சில் மரணத்தை நேரலையில் ஒளிபரப்புவதை பேஸ்புக் நிறுத்தம்



பிரான்சில் குணப்படுத்த முடியாத நோயால் பாதிக்கப்பட்டுள்ள ஆடவர் ஒருவர் தமது மரணத்தை நேரலையில் ஒளிபரப்புவதை பேஸ்புக் தடுத்துள்ளது.

57 வயது அலேன் கோக் 34 ஆண்டுகளாகக் குணப்படுத்த முடியாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் கருணைக் கொலை மீதான அந்நாட்டின் தடையை நீக்க முனைகிறார். தமது மரணத்தின் மூலம் அதிகாரிகளின் முடிவை மாற்ற அவர் எதிர்பார்த்துள்ளார்.

“அது போன்ற முக்கிய விவகாரத்தின் மீது கவனத்தை ஈர்க்க முனையும் அவரின் எண்ணத்தை மதிக்கிறோம். இருப்பினும் தற்கொலை முயற்சிகளை ஒளிபரப்புவது, மேலும் அதிகமானோரை தங்களைக் காயப்படுத்திக்கொள்ளத் தூண்டலாம் என்று நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளனர். அதனால் நேரலையை முடக்கியுள்ளோம்” என்று பேஸ்புக் தெரிவித்தது.

உணவு, தண்ணீர், மருந்து ஆகியவற்றை உட்கொள்வதை நிறுத்திக்கொண்டுள்ள கோக், மற்றொரு வழியில் தமது மரணத்தை ஒளிபரப்பவுள்ளதாகக் கூறியுள்ளார். இதற்கு முன்னர் ஆடவர் இவ்வாண்டு மார்ச் மாதத்தில் கருணைக் கொலை மேற்கொள்ள அனுமதி வழங்கும்படி கேட்டு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுக்கு கடிதம் அனுப்பினார்.

இருப்பினும் அதற்கு நாட்டில் அனுமதியில்லை என்று மக்ரோன் பதிலளித்திருந்தார். குணப்படுத்த முடியாத சில நோய்களுக்கு மருத்துவ உதவியுடன் உயிரை மாய்த்துக்கொள்வதற்கு அண்டை நாடுகளான சுவிட்சர்லாந்து, பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்தில் சட்ட அனுமதி உள்ளபோதும் கத்தோலிக்க திருச்சபையின் அழுத்தத்திற்கு மத்தியில் பிரான்ஸ் அதற்கு எதிர்ப்பு வெளியட்டு வருகிறது.

சீனாவில் இருந்து மர்ம விதைகள்:

# அமெரிக்காவில் வெளிநாட்டு விதைகளுக்கு அமேசன் தடை

அமெரிக்காவின் மிகப் பெரிய மின் வர்த்தக நிறுவனமான அமேசன் வெளிநாட்டு விதைகளும் செடிகளும் அமெரிக்காவில் விற்கப்படுவதைத் தடை செய்துள்ளது.




சீனாவிலிருந்து வந்ததாக நம்பப்படும் ஆயிரக்கணக்கான சந்தேகத்திற்குரிய விதைப் பொட்டலங்கள் குறித்து அமெரிக்க மக்கள் கேள்வி எழுப்பினர்.

அதைத் தொடர்ந்து புதிய விதிமுறையை அமேசன் அறிமுகம் செய்ததாக வோல் ஸ்ட்ரீட் ஜெர்னல் பத்திரிகை தெரிவித்தது.

புதிய விதிமுறைகளைப் பின்பற்றாத விற்பனையாளர்களின் கணக்குகள் நீக்கப்படும் என்று அமேசன் நிறுவனம் அறிவித்தது.

யாருக்கும் தெரியாத வகையில் அனுப்பிவைக்கப்பட்ட விதைப் பொட்டலங்கள் குறித்து பல்வேறு அமெரிக்க அமைப்புகள் விசாரணை நடத்திவருகின்றன.

அத்தகைய விதைப் பொட்டலங்களை யார் அனுப்புகிறார் என்பதை உறுதிசெய்ய சீன அதிகாரிகளுடன் அமெரிக்க அதிகாரிகள் இணைந்து செயல்படுகின்றனர்.

அமெரிக்காவின் வேளாண்மையைப் பாதிக்கும் வகையிலான செடி வகைகளும் பூச்சிகளும் விதைப் பொட்டலங்கள் மூலம் அனுப்பி வைக்கப்படக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

விதைப் பொட்டலங்களைப் பெற்ற சுமார் 20,000 பேர் அதுகுறித்து அமெரிக்க வேளாண் துறைக்குப் புகார் அளித்துள்ளனர்.

# எட்டு மாதங்களில் ரோமுக்கு வெளியில் பாப்பரசர் பயணம்



பாப்பரசர் பிரான்சிஸ் அடுத்த மாதம் இத்தாலியின் அசிசி நகருக்குப் பயணிக்கவுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றால் ரோம் பெப்ரவரி மாதத்திலிருந்து பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் அந்நகருக்கு வெளியே மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும். அவர் அடுத்த மாதம் 3ஆம் திகதி அசிசி நகருக்குச் செல்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. புனித பிரான்சிஸ் பீஃஸ்ட் விழா ஆரம்பிப்பதற்கு ஒருநாள் முன்னர் அவர் அங்கு செல்லவுள்ளார். கொரோனா முடக்க நிலையில் இருந்து வத்திக்கான படிப்படியாக மீண்டு வரும் நிலையில் பாப்பரசர் ஆறு மாதங்களில் முதல் முறையாக இந்த வாரம் பொது மக்களை சந்திக்கும் நிகழ்வில் பங்கேற்றார்.



# பனிக்கட்டிக்குள் நின்று புதிய உலக சாதனை

பனிக்கட்டி நிரப்பிய பெட்டி ஒன்றுக்குள் இரண்டரை மணி நேரம் நின்று ஆஸ்திரிய நாட்டவர் ஒருவர் புதிய உலக சாதனை ஒன்றை படைத்துள்ளார்.

42 வயதான ஜேசப் கொபேர்ல் வெறுமனே காற்சட்டையை மாத்திரம் அணிந்துகொண்டு வெளியே தெரியக் கூடிய பெட்டிக்குள் தனது தோள்பட்டை வரை பனிக்கட்டியை நிரப்பி இருந்தார். இதன் மூலம் முழு உடலையும் பனிக்கட்டியால் நிரப்பி இரண்டு மணி எட்டு நிமிடங்கள் இருந்த தனது முந்தைய சாதனையை அவர் முறியடித்துள்ளார். உறையும் குளிருக்கு மத்தியில் வேதனைக்கு எதிராக போராட நல்ல எண்ணங்களில் மாத்திரம் அவதானம் செலுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எல்லா சமூகங்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய அரசியல் யாப்பு அவசியம்

(ஒலுவில் விசேட நிருபர்)

அரசியல் யாப்பு 19வது சீர் திருத்தத்தினால் நாடு பின்னோக்கிச் செல்லக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனை மாற்றி எல்லா சமூகமும் ஒற்றுமையுடன் வாழக் கூடிய யாப்பு சீர்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார்.

வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வும் மக்கள் சந்திப்பும் வெள்ளிக்கிழமை (04) ஒலுவில் ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஒலுவில் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் டொக்டர் ஏ.எல். அலாவுதீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பெரும்பான்மை பலத்துடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான கட்சி ஆட்சியமைத்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் முஸ்லிம் சமூகத்தை காட்டிக் கொடுத்து அரசியல் செய்தவர்கள் முஸ்லிம் சமூகத்தை தோற்கடித்து விட்டு இன்று பாராளுமன்றம் சென்றுள்ளார்கள். முஸ்லிம் சமூகம் ஏமாற்றப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பின்தங்கிய பிரதேசங்களில் தடைப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்கள் இவ் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஒலுவில் பிரதேசத்தில் பல வருடங்களாக ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுப்பதற்குரிய வேலைத் திட்டத்தினை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.



மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதோடு இப்பிராந்தியத்தின் அபிவிருத்திக்கும் என்னாலான ஒத்துழைப்புகளை வழங்கவுள்ளேன்.

பல தியாகங்களுக்கு மத்தியில் எனக்கு வாக்களித்து பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்த மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு வழி வகைகளை ஏற்படுத்தியுள்ளேன்.

தேசிய காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்கு ஒலுவில் மக்கள் என்றும் கைகோர்த்து செயற்பட்டவர்கள்.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் விட்டு சென்ற இடத்தில் இருந்து எமது மக்களை தலைமை தாங்கி வழி நடத்த கூடிய தலைமையை தேசிய காங்கிரஸே கொண்டிருக்கின்றது. எமது மக்களின் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் எமக்குத்தான் தெரியும். ஆனால் ஏனையோர் தீர்க்க கூடிய பிரச்சினைகளை தீராத பிரச்சினைகளாக நீடிக்க வைத்து அதில் குளிர் காய்ந்து கொண்டிருக்கின்றனர். கடந்த ஐந்து வருடங்களில் அவர்கள் எமது சமூகத்துக்கு எந்த நல்ல விடயங்களையும் செய்து கொடுக்கவே இல்லை என்றார்.

## ஆங்கில உயர் டிப்ளோமா தாரிகளை ஆசிரியர்களாக இணைக்குமாறு கோரிக்கை

கந்தளாய் தினகரன் நிருபர்

ஆங்கில உயர் டிப்ளோமா தாரிகளை (HNDE) ஆசிரியர்களாக இணைத்துக் கொள்ள ஆவன செய்யுமாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரைக் கேட்டுள்ளார்.

செயலாளர் ஐ .கே. ஜி. முத்துபன்டாவை சந்தித்து திருகோணமலை மாவட்ட கல்வி அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடியபோதே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

ஆங்கில உயர் டிப்ளோமா சான்றிதழ் பெற்றோர் அண்மையில் பாராளுமன்ற உறுப்பினரை சந்தித்து நீண்ட காலமாக டிப்ளோமா தாரிகளுக்கான நியமனம் வழங்கப்படாமல் உள்ளது. எனவே தமக்கான நியமனம் குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதன் அடிப்படையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் இந்தக் கோரிக்கையை கல்வி அமைச்சின் செயலாளரிடம் முன் வைத்தார்,

இது குறித்து தான் நடவடிக்கை எடுப்பதாக இதன் போது கல்வி அமைச்சின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினரிடம் உறுதி அளித்தார்.

## மின் விளக்குகளை பொருத்துமாறு கோரிக்கை

தோப்பூர் தினகரன் நிருபர்

மூதூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாலத்தோப்பூர் சந்தியிலிருந்து தோப்பூர் போட்டாடிவரையிலுள்ள இடங்களுக்கு இடையிலான பகுதிகளில் வீதிகளில் தெருமின் விளக்குகளை பொருத்துமாறு பொதுமக்கள் உரிய பகுதியினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இரவு நேரங்களில் இவ் வீதிகளில் தெருமின் விளக்குகள் இன்மையால் இருளானதாகக் காணப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலதிக வகுப்புகள் முடிந்து வீடு செல்லும் மாணவர்களும் சிரமப்படுவதாக கூறுகின்றனர்.

# 'நான் தோல்வியடையவில்லை' சமூகம் தோல்வி அடைந்துள்ளது

### கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



நான் தோல்வியடையவில்லை சமூகம்தான் தோல்வி அடைந்துள்ளது. இது மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள தோல்வியாகும் என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

காத்தான்குடியில் வெள்ளிக்கிழமை (04) இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நான் ஒரு தொழிலாக கருதவில்லை, என்னை சிலர் சம்மாந்துறை தொகுதியில் போட்டியிடச் சொல்வார்கள் அல்லது கிண்ணியாவுக்கு வாருங்கள் திருகோணமலையில் போட்டியிடுங்கள் என்றெல்லாம் எனக்கு பல ஆலோசனைகளை சொல்வார்கள் இது ஒரு எம்.பி.தொழில் தேவை என்றால்தான் நான் இதைச் செய்ய வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவி என்பது எனது தொழில் கிடையாது. அது எனக்கு அவசியம் கிடையாது. எம்.பி.வேலையை எடுக்க வேண்டும் என்ற தேவைப்பாடும் எனக்கு கிடையாது.

என்னுடைய மக்களுக்கு, என்னுடைய சமூகத்துக்கு என்னால் முடிந்ததை செய்வதற்கு இந்த பதவியை பயன்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த தேர்தலில் நான் போட்டியிட்டேன்.

என்னை தோக்கடித்த துரோகத்தத்தை மூடி மறைப்பதற்காக எங்களுடைய துரோகிகள் பொய்யான கட்டுக் கதைகளை எல்லாம் பரப்பினார்கள்.

இவர் மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தை வென்றெடுப்பதற்காக பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை விட்டுக் கொடுத்துவிட்டார் என்றெல்லாம் கதைகளை பரப்பினார்கள்.

அவ்வாறு நாங்கள் யாரும் விட்டுக் கொடுக்கவும் முடியாது அப்படி விட்டுக் கொடுக்க இந்த நாட்டில் எந்த அதிகாரமும் கிடையாது.

அந்த பல்கலைக்கழகத்தை இறைவனின் உதவியோடு அதை நாங்கள் மீட்டெடுப்போம். அதற்கான நடவடிக்கைகளை, பணிகளை நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம்.

எதிர்வரும் காலங்களில் நாங்கள் மிக நிதானமாக, கவனமாக நடந்து கொள்ள வேண்டும். அதனை சிறந்த முறையில் கையாள வேண்டும்.

என்னால் முடிந்தளவு என்னுடைய சமூகப் பணிகளை நான் தொடர்ந்து செய்து கொண்டிருப்பேன். நான் ஒருபோதும் என்னுடைய சமூகப் பணியில் இருந்து ஒய்வெடுக்கப் போவதில்லை. என்னுடைய இறுதி மூச்சு இருக்கின்ற வரைக்கும் உங்களுக்காக, இந்த நாட்டு முஸ்லிம்களுக்காக என்னால் என்னென்ன சமூகப் பணிகளை செய்ய முடியுமோ அத்தனை பணிகளையும் செய்வேன் என்றார்.

# இல்மனைட் அகழ்வுக்கு அரசு அனுமதி வழங்க கூடாது

### அரசாங்க அதிபர், ஜனாதிபதி, பிரதமருக்கு கோரிக்கை மனு

திருக்கோவில் தினகரன் நிருபர்

அம்பாறை திருக்கோவில் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இல்மனைட் அகழ்வுக்கு எதிராக திருக்கோவில் மற்றும் தாண்டியடி மக்கள் எதிர்ப்பு சுலோக அட்டைகளை ஏந்தியவாறு பாரிய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றினை முன்னெடுத்து இருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டம் சனிக்கிழமை (5) தாண்டியடி பிரதான வீதியில் ஆரம்பிக்கப்பட்டு அங்கிருந்து பிரதான வீதி வழியாக திருக்கோவில் மணிக்கூட்டு கோபுரம் வரை பேரணியாக வந்தனர்.



திருக்கோவில் பிரதேசத்தில் கடந்த 2018ம் ஆண்டு இல்மனைட் அகழ்வுக்கான முன்னெடுப்புக்கள் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினால் முன்னெடுக்கப்பட்டு இருந்த வேளை, அப்போது மக்கள் வீதியில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்து இருந்த நிலையில் இல்மனைட் அகழ்வு வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் மீண்டும் கடந்த வாரம் திருக்கோவில் தாண்டியடி கடற்கரையில் அரச துறைசார் அதிகாரிகள் கள விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இருந்த நிலையில் மக்கள் மீண்டும் இவ் இல்மனைட் அகழ்வுக்கு அரசு அனுமதி வழங்க வேண்டாம் என கோரிக்கையை முன்வைத்து ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்து இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து திருக்கோவில் மணிக்கூட்டுக் கோபுரத்தில் இருந்து திருக்கோவில் மற்றும் தாண்டியடி மக்கள் நடைபவனியாக திருக்கோவில் பிரதேச செயலகத்திற்குச் சென்று மக்களின் கையொப்பமிடப்பட்ட கோரிக்கை மனுவை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் ஊடாக இல்மனைட் அகழ்வுக்கு அரசு அனுமதி வழங்க வேண்டாம் என்ற கோரிக்கை மனுவை கையளித்திருந்தனர்.

# அக்கரைப்பற்றில் கல்வி அபிவிருத்தி கூட்டம்

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)



அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திக்கூட்டம் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஏ.ஜீ.பஸ்மில் தலைமையில் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் மௌலவி ஏ.எல்.எம். காசீம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சித்திபாத்திமா, உதவிக் கல்விப்பணிப்பாளர் ஏ.எம்.நௌபர்டீன், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலைகளின் அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது வலயக் கல்விப்பணிப்பாளர் ஏ.எல்.எம்.காசீம் உரையாற்றுகையில்,

நாளை செவ்வாய்க்கிழமை (08) தரம் 1 முதல் தரம் 13 வரையும் வழமைபோன்று பாடசாலைகள் நடைபெற வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளதால் கொரோனா தொற்றை கவனத்தில் கொண்டு சுகாதார நடைமுறைகளைப் பேணி பாடசாலைகளின் அதிபர்கள் செயற்பட வேண்டும் என்றார்.

தரம் 5 புலமைப் பரிசில், க.பொ.த.சாதாரண தரம் மற்றும் க.பொ.த.உயர்தரம் போன்ற பரீட்சைகளில் மாணவர்கள் முழு விருத்தியுடன் தோற்றுவதற்காக முடிவுறாத பாடங்களை விசேட வேலைத்திட்டத்தினுடாக அலகுகளை முடிப்பதற்கு அதிபர்கள் கூடிய கவனம் மேற்கொள்ள வேண்டும்.

பாடசாலைகளில் இன்று திங்கட்கிழமை முதல் விரல் அடையாள இயந்திரங்களை பயன்படுத்த அதிபர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 24ம் திகதி இவ்வாண்டுக்கான பாடசாலை முடிவுறவுள்ளதால் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்துவதற்கு அதிபர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அதிபர் தேர்வுக்கு நேர்முகப் பரீட்சை

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் கல்வி வலயத்திற்கு உட்பட்ட சதாம் வித்தியாலயத்திற்கு புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை நாளை 08ம் திகதி கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்ற உள்ளது.

கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ்.வரதசீலனினால் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுமாறு விண்ணப்பம் செய்த அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களின் மூலப் பிரதி மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நிழற் படப்பிரதிகளுடன் சமுகம் தருமாறும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உணவு விற்பனை நிலையங்கள் சோதனை

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

மண்முனை தென் எருவில்பற்று பிரதேசத்திற்குட்பட்ட பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் பிரதேசத்திலுள்ள பலசரக்கு கடைகள் மற்றும் உணவகங்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் எஸ். கிருஸ்ணகுமார் வழிகாட்டலில் பிரதம மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் தலைமையிலான குழுவினரே உணவுப் பரிசோதனைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மண்முனை தென் எருவில் பற்றிலுள்ள கிராமங்களில் இயங்கும் பொதுச் சந்தைகள், பலசரக்கு பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள், உணவகங்கள் ஆகியனவற்றிலுள்ள உணவுப் பொருட்களின் தரம், உற்பத்தி திகதி, காலாவதி திகதிகள் பரிசோதிக்கப்படுவதுடன், காலாவதியான பொருட்களை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்களின் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் காலாவதியான உணவுப்பொருட்களை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்களுக்கு எதிராக சுகாதாரப் பரிசோதகர் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என பிரதம மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். யோகேஸ்வரன் தெரிவித்தார்.

## சுவர் விழுந்து குழந்தை பலி

திருமலை மாவட்ட விசேட நிருபர்

தம்பலகாமம் முள்ளிப்பொத்தானை பகுதியில் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த 2 வயது குழந்தை மீது மதில் சுவர் இடிந்து விழுந்ததில் குழந்தை பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் வெள்ளிக்கிழமை (04) முள்ளிப்பொத்தானை 08 ஆம் கொளனியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் நசீர் முஷ்ரி (வயது 02) எனும் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தை விளையாடிக் கொண்டிருந்த போது மதில் சுவர் விழுந்ததில் தலையில் ஏற்பட்ட பலத்த காயத்தினால் கந்தளாய் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது சிகிச்சைக்கு பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## அக்கரைப்பற்று தனிமைப்படுத்தல் முகாமில் நான்கு பேருக்கு கோவிட் 19

### வைத்திய அதிகாரி இஸ்மாயில்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள, நுரைச்சோலை தனிமைப்படுத்தல் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர் பரிசோதனையின் போது, நான்கு கோவிட் 19 தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதாக அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.இஸ்மாயில் தெரிவித்தார்.

கோவிட் 19 ஒழிப்பு வேலைத் திட்டத்தின் கீழ், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களும் தற்பொழுது பிரதேச ரீதியா பீ.சி.ஆர் பரிசோதனையை முன்னெடுத்து வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ், அக்கரைப்பற்று நுரைச்சோலை தனிமைப்படுத்தல் முகாமிலுள்ளவர்கள் கடந்த வாரம் பீ.சி.ஆர்.பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

சுமார் 250 பேர்களில் நான்கு பேர் மாத்திரம் கோவிட் 19 தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.





தனக்கும் தேசிய காங்கிரஸ் கட்சிக்கும் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வுக்கு நேற்றுமுன்தினம் (05) வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லாவுக்கு அக்கரைப்பற்று மக்கள் மாபெரும் வரவேற்பினை வழங்கினர். அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசலுக்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினரை படத்தில் காணலாம்.
(படம்: அக்கரைப்பற்று தினகரன் சுழற்சி நிருபர்)




**முன்மொழிவு இல.** : **FD/R/M08/OF/MCC/TEN/01**

**தலைப்பு** : **கண்டி சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை (பேராதனை வீதி) 377ஆம் இலக்கத்திலுள்ள 'மஹாநுவர வர்த்தக நிலையத்தை' 15 வருட காலப்பகுதிக்கு செயற்பட வைத்தல், முகாமைத்துவப்படுத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக 'செயற்படும் அடிப்படையில்' குத்தகைக்கு வழங்குவதற்காக முன்மொழிவுகளை கோரல்.**

1. கண்டி சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை (பேராதனை வீதி) 377ஆம் இலக்கத்திலுள்ள மஹாநுவர வர்த்தக நிலையத்தை 15 வருட காலப்பகுதிக்கு செயற்படும் அடிப்படையில் செயற்பட வைத்தல், முகாமைத்துவப்படுத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக முன்மொழிவு ஆவணங்களுக்கமைவாக முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக தகுதியுள்ள முன்மொழிவாளர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கண்டி மாநகர சபையானது கோரும் இவ்வேளையில் மேற்குறிப்பிட்ட முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகளை கோருவதற்கான அதிகாரமுள்ள நபர் கண்டி மாநகர சபையின் ஆணையாளராவார்.

2. மேற்குறிப்பிட்டுள்ள வணிகவளாகமானது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வணிக வளாகமாகவும் (நவீன கட்டமைப்பு) நவீன தொழில்நுட்பவியலில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் கண்டி மாநகர சபைக்கு உரிமையுள்ளதாகவும் கண்டி மாநகருக்கு வருகை தரும் அதனது பிரஜைகளுக்கும் பார்வையாளர்களுக்கும் பொருட்களை கொள்வனவு செய்வதில் முதன்மையான தரத்தை வழங்குவதேயாகும். அதன் செயற்பாடானது இலங்கையில் ஒரே கூரையின் கீழ் பல்லின வசதிகளை வழங்கும் தனித்துவமான நிலையமாகும். இந்த வணிக வளாகமானது **10 மாடிகளையுடையதும் கடைகளுக்கான போதுமானளவு இடவசதி, அலுவலகங்கள், உணவுக்கூடங்கள், சினிமா மற்றும் பொழுதுபோக்கும்** இடப்பரப்புக்களையும் வளிச்சீராக்கப்பட்ட அமரும் பிரதேசங்களையும் இயங்கும் நிலையிலுள்ள ஏணிப்படிகளை கொண்டுள்ள எஸ்கலேட்டர்கள், மின்தூக்கிகள் மற்றும் தரைகீழ் மாடியில் 152 வாகனங்களுக்கான ஒதுக்கப்பட்ட இடப்பரப்புக்களையும் கொண்டுள்ளதாகும்.

3. இக்கட்டிடத்தொகுதியின் மொத்த இடப்பரப்பானது அண்ணளவாக **155,000 ச.அடியாகும்**.

4. 2020.09.08ஆம் திகதியிலிருந்து 2020.09.22ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.45 மணி வரையும் கண்டி மாநகர சபையின் பிரதான மாநகர கணக்காளருக்கு வியாபார தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமாப்பிப்பதன் மூலம் ஆங்கில் மொழியிலுள்ள முழுமையான முன்மொழிவு ஆவணங்களை ஆர்வமுள்ள முன்மொழிவாளர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். முன்மொழிவு ஆவணத்தை கண்டி மாநகர சபைக்கு ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 25,000 இலங்கை ரூபா + பெசேவ ஆகியவற்றைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

5. இந்த முன்மொழிவுகளில் பின்வரும் பிரதான தகைமைகளைக் கொண்டுள்ள தகுதியுள்ள முன்மொழிவாளர்கள் மாத்திரமே பங்கு பெறலாம்.

   5.1. இலங்கையின் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ள கம்பனியொன்றாக இருப்பதுடன் அல்லது 1866 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க கூட்டுப்பங்காண்மை கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ள அல்லது இலங்கையில் அமைக்கப்பட்ட கூட்டுமுயற்சியொன்றின் கீழ் பதிவு பெற்றுள்ளதும் ஒரு (01) கூட்டுமுயற்சி பங்காளர் இலங்கை பிரஜையாகவும் அத்துடன் பிரதான பங்காளராவும் இருத்தல் வேண்டும்.

   5.2. **கம்பனி/ கூட்டுப்பங்காண்மையாகவிருப்பின், இலங்கையில் சட்டரீதியில் பதிவு பெற்றுள்ளதாகவிருத்தல் வேண்டும்.**

   5.2.1. கம்பனி/கூட்டுப்பங்காண்மையானது கடந்த ஐந்து வருடங்களாக வர்த்தக செயற்பாட்டில் இருத்தல் வேண்டும்.

   5.2.2. கம்பனி/கூட்டுப்பங்காண்மையானது ஆகக்குறைந்த சராசரி வருடாந்த செயற்பாட்டு வருமானமாக (தேறியது) கடந்த ஐந்து வருடங்களில் 300,000,000 இலங்கை ரூபாவாக (முன்னூறு மில்லியன் இலங்கை ரூபா) இருப்பதுடன் கடந்த ஐந்து வருடங்களுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களுடன் வருமானவரியாக செலுத்தப்பட்ட தொகைக்கான வரவுத் துண்டுகளும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

   5.3. இலங்கையிலுள்ள கூட்டுமுயற்சி கூட்டுப்பங்காண்மையாகவிருப்பின், அத்துடன் பிரதான பங்காளருமாகவிருப்பின், இலங்கையில் பதிவுபெற்ற வியாபாரமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் மேலேயுள்ள 5.1 ஆம் உபவாசகத்தில் மேலும் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

   5.3.1. கூட்டுமுயற்சியின் பங்காளர்களின் எண்ணிக்கை மூன்றிற்கு குறைந்த அல்லது மூன்றிற்கு சமமாக இருப்பதுடன் கடந்த ஐந்து வருடங்களின் அனைத்து சாரார்களினதும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் வழங்கப்படல் வேண்டும்.

   5.3.2. பங்காளர்களின் வருடாந்த திரட்டிய செயற்பாட்டு சராசரி வருமானம் (நிதிப்புரள்வு) 300,000,000 இலங்கை ரூபாவிற்கு (முன்னூறு மில்லியனுக்கு குறைவாக இருத்தல் ஆகாது. கடந்த ஐந்து வருடங்களில் பிரதான பங்காளரின் வருடாந்த சராசரி செயற்பாடு 200,000,000 இலங்கை ரூபாவிற்கு குறைவாக இருத்தல் ஆகாது (இருநூறு மில்லியன் இலங்கை ரூபாவிற்கு) (வெளிநாட்டு பங்காளரின் நிதிப்புரள்விற்காக ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் இலங்கை மத்திய வங்கியினால் பிரசுரிக்கப்படும் ஐ.அ.டொ. இன் விற்பனை விலையின் அடிப்படையில் இலங்கை ரூபாவாக மாற்றப்படும்.

   5.4. எந்தவொரு முன்மொழிவாளரின் பெயர் அல்லது கூட்டுமுயற்சியின் எந்தவொரு பங்காளர் மற்றும் கூட்டுப்பங்காண்மையின் பங்காளரின் பெயர்கள் **CRIB** அறிக்கையில் (இலங்கை கடன் தகவல் பணியகம்) தவறிழைத்தவர் பட்டியலில் பிரசுரிக்கப்படல் ஆகாது.

6. முன்மொழிவாளரானவர் நிதியிடல் வளங்களான திரவச் சொத்துக்கள், பாரபந்தமற்ற மெய்ஆதனங்கள், கடன் வழிகள் மற்றும் ஏனைய நிதியிடல் வழிகள் (எந்தவொரு ஒப்பந்தரீதியிலான முற்பணக்கொடுப்பனவுகள் நீங்கலாக) ஆகியவை 100,000,000 இலங்கை ரூபாவிற்கு (ஒரு மில்லியன் இலங்கை ரூபா) குறையாததாக காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகள் அனைத்துமடக்கிய காசுப் பாய்ச்சல் தேவைப்பாடுகள் மற்றும் முன்மொழிவாளரின் தற்போதைய வியாபார பொறுப்பாகவுமாக இருத்தல் வேண்டும்.

7. முன்மொழிவாளரின் அல்லது முன்மொழிவாளர்களின் நிர்ணயிக்கப்பட்ட பிரதிநிதி/ பிரதிநிதிகள் ஆகியோர் 2020.10.06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கண்டி, தபோவன வீதி 12 ஆம் இலக்கத்திலுள்ள கண்டி மாநகர சபையில் நடைபெறவுள்ள முன்மொழிவுகள் முன்னோடிக் கூட்டத்திற்கு கட்டாயமாக சமுகமளித்தல் வேண்டும்.

8. முன்மொழிவிற்கு முன்னோடி தள விஜயமானது 2020.10.06ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கண்டி, சிறிமாவே பண்டாரநாயக்க மாவத்தை, 377 ஆம் இலக்கத்திலுள்ள மஹாநுவர வர்த்தக நிலையத்தில் நடைபெறும்.

9. முன்மொழிவுகள் 2021.05.24ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

10. இலங்கை மத்திய வங்கியில் பதிவு பெற்றுள்ள வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதும் 5,000,000 இலங்கை ரூபாவிற்கானதுமான (ஐந்து மில்லியன் இலங்கை ரூபா) முன்மொழிவு விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து முன்மொழிவுகளும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. முன்மொழிவு விலைமனுப்பிணையானது 2021.06.25ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

12. 2020.11.23ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கண்டி, தபோவன வீதி, 12ஆம் இலக்கத்திலுள்ள கண்டி மாநகர சபையின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

13. குத்தகைக்கான காலப்பகுதியானது குத்தகை ஒப்பந்தம் வழங்கும் திகதியிலிருந்து 15 வருடங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளதுடன் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் முன்மொழிவு ஆவணத்திற்கமைவாக வரிவீதங்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக குத்தகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும்.

14. பொதுத் தகவல் மற்றும் தொழில்நுட்ப முன்மொழிவுகள் அவற்றை ஏற்றுக் கொள்ளும் நேரத்திற்கு பின்னராக கண்டி மாநகரசபையில் திறக்கப்படுவதுடன், முன்மொழிவாளர்கள் மற்றும் அவர்களின் ஒதுக்கப்பட்ட பிரதிநிதிகளும் அவற்றை திறக்கும் வேளையில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

15. இதற்கான காரணங்களை முன்வைக்காமல் பெற்றுக்கொள்ளப்படும் எவ்வித முன்மொழிவையும் நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை உரித்தாளர் மற்றும்/ அல்லது கண்டி மாநகர சபையானது கொண்டுள்ளது.

16. ஆர்வமுள்ள முன்மொழிவாளர் மேலதிக தகவலை **081-2223832** அல்லது **081-2222275** நீடிப்பு **- 233** ஆகிய தொலைபேசி எண்களினூடாக அல்லது **081-2223832** என்ற தொலைநகல் எண்ணினூடாக மற்றும் **kmcitunit@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவும் கண்டி மாநகரசபை, மாநகரசபையின் பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையாளர்,**
**கண்டி மாநகர சபை**

# பனங்காடு ஸ்ரீ பாசுபதேசுவரர் ஆலய கும்பாபிஷேகம்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பழம்பெரும் ஆலயங்களில் ஒன்றான அக்கரைப்பற்று பனங்காடு அருள்நிறை மாதுமை உடனுறை ஸ்ரீ பாசுபதேசுவரர் தேவஸ்தான புனராவர்த்தன நவ குண்ட பஷ அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக பெரும்சாந்தி குடமுழுக்கு பெருவிழா 28ஆம் திகதி காலை 6மணி தொடக்கம் 7.20 மணி வரையுள்ள சுக்கிலபட்சத்து தசமி திதியும் மூல நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் இறைவன் திருவருளால் இடம்பெற்றது.

கடந்த 24ஆம் திகதி அதிகாலை கருமாரம்ப கிரியைகளோடு ஆரம்பமான கும்பாபிஷேக பெருவிழாவின் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வானது 25ஆம் திகதி நண்பகல் 11.55 தொடக்கம் 26ஆம் திகதி 4மணிவரை இடம்பெற்றது.









தொடர்ந்து கிரியைகள் இடம்பெற்றதுடன் 28ஆம் திகதி காலை 6மணிமுதல் 7.20 மணிவரையுள்ள சுபமகூர்த்தத்தில் வேதோத்திர பாராயணங்கள் முழுங்க மாதுமை அம்பிகா சமேத ஸ்ரீ பாசுபதேசுவரருக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் குடமுழுக்கு இடம்பெற்று பெரும் சாந்தி விழா நடைபெற்றது.

ஆலய தலைவர் மா.இரகுநாதன் முன்னிலையில் கும்பாபிசேக கிரியைகள் யாவும் கும்பாபிஷேக பிரதிஸ்டா பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ பாலகுகேஸ்வர சிவாச்சாரியார் தலைமையில் ஆலய பிரதமகுரு வித்தியாசாகரர் சிவஸ்ரீ புண்ணிய கிருஸ்ணகுமாரக்குருக்கள் மற்றும் ஈசான சிவாச்சாரியார் கிரியாதிலகம் சிவஸ்ரீ அ.மூர்த்தீஸ்வரக்குருக்கள் ஆகியோரின் வழிகாட்டலில் நடைபெற்றது.

அதிகாலை கும்பம் உள்வீதி உலா இடம்பெற்றதுடன் பரிவார மூர்த்திகள் குடமுழுக்கு செய்யப்பட்டன. தொடர்ந்து அடியார்கள் புடைசூழ அரோகரா எனும் பக்தர்களின் வேண்டுதலுடன் பிரதான கும்ப வெளிவீதி உலா இடம்பெற்று மாதுமை உடனுறை ஸ்ரீ பாசுபதேசுவரருக்கும் குடமுழுக்கு இடம்பெற்றது. ஈழ வளதிருநாட்டின் கிழக்கே மீன்பாடும் தேனாடாம் மட்டு நகருக்குத் தெற்கே அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப் பற்று நகரிலிருந்து இருமைல்களுக்கு அப்பால் சாகாமம் வீதியில் பனங்காடு என்னும் பெயரில் அழகிய கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தை சுற்றி வற்றாத ஜீவநதியாக தில்லைநதி வளைந்து பாய்கின்றது. செந்நெல் விளையும் செழிப்பு மிகு வயல் நிலங்கள் நிறைந்து விளங்குகின்றன.

கடல், ஆறு, குளம் ஆகிய மூன்று நீர் நிலைகளும் முறையுற அமைந்து மேலும் இக்கிராமத்தை அழகூட்டுகின்றன. இத்தகைய இயற்கை எழில்கள் நிறைந்த இக்கிராமத்தில் கிழக்கே முதலும் முடிவும் இல்லா முழுமுதற் பெருமான் ஸ்ரீ பாசுபதேசுவரர் என்ற நாமத்தோடு அன்னை ஸ்ரீ மாதுமை அம்பாள் சகிதம் வீற்றிருந்து அருள் பாலித்தருளுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வாச்சிக்குடா விஷேட நிருபர் ...

# தொழிலே தெய்வம் என வாழும் இந்துக்கள்!

தமிழ் மக்கள், தாம் செய்யும் தொழிலை தெய்வமாகவும் இந்தத் தொழிலுக்கு பயன்படும் உபகரணங்களை அதன் அடையாளமாகவும் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இலங்கையில் காடுகளை அழித்து பாதைகள் அமைக்கும் காலம் முதல் கோப்பி, தேயிலை பயிர் செய்கை நட ஆரம்பித்த காலம் முதலாக ஒவ்வொரு தொழில் தொடர்பாகவும் அதற்கு அவர்கள் பயன்படுத்திய இடங்கள், பொருட்கள் என்பவை தொடர்பாகவும் கூடிய கரிசனை கொண்டு அவற்றை தெய்வங்களின் அடயாளமாக சின்னமாக கொண்டு வழிபட்டனர். தொழிற்சாலைகளில் சக்கரங்கள், ரோதைகளை கொண்டு தொழிலில் ஈடுபட்டவர்கள்,

ரோதையை தெய்வமாக கொண்டு "ரோதைமுனி" என வழிபடத் தொடங்கினர்.

தேயிலை மலையில் கத்தியை கொண்டு கவ்வாத்து வெட்டுபவர்கள், கவ்வாத்து சாமி என கற்பாறைகளில் கற்களை தெய்வங்களாக வைத்து வழி படத் தொடங்கினார்கள். ஆடைகளை சலவை செய்பவர்கள் வெள்ளாய் சாமி என ஆடைகளை அவித்து சலவைசெய்யும் இடங்களை தெய்வமாக கொண்டு வழிப்பட்டனர்.

இந்த வரிசையில் வாழ்ராசா, மாடசாமி, கம்பிமுனி, எல்லை முனி என பல்வேறு பெயர்களில் தெய்வங்களை தாமாக உருவாக்கி வழிபட்டு வந்தனர்.

இந்த வழிபாட்டு முறையானது எமது இந்து சமயத்தின் கோட்பாடுகளுக்கு முற்றிலும் மாறான, விரோதமானதாகவே இருந்தன.

ஐந்து பத்து ஏக்கர் தேயிலை மலையில் கவ்வாத்து வெட்டி முடிந்ததும் கவ்வாத்து சாமியை கும்பிடுவர். இதன்போது ஆடு வெட்டி இரத்த பழி கொடுத்து வழிபடுவர்.



தேயிலை தொழிற்சாலைகளில் ரோதமுனி சிறு ஆலயமாகவே இருக்கும். இதற்கு ஆங்கில வெள்ளைக்காரர்களின் அங்கீகாரமும் அனுமதியும் இருந்தது. தோட்டங்களில் பாதைகள முறையாக அமைக்க முன் வாகன வசதிகள் இல்லாதபோது.கேபல் கம்பிகள் மூலமாகவே தேயிலை கொழுந்து தேயிலை மலைகளில் இருந்து தொழிற்சாலைகளுக்கு கொண்டு வரப்பட்டன. இவ்வாறான ரோதைகளில் கேபல் பொருத்தப்பட்டிருந்த இடங்களில் ரோதமுனி தெய்வத்தை வைத்து வழிபட்டனர். இந்த கேபல் முறையில் கொழுந்து எடுத்து செல்லப்படும் கட்டமைப்பு இல்லாது போனாலும் அதன் இடிபாடுகள் உள்ள இடங்களில் இன்றும் ரோதமுனி தெய்வ வழிபாடுகள் உள்ளன. வருடம் தோறும் இங்கு ஆடறுத்து வழிபட்டு வருகின்றனர்.

புசல்லாவ டெல்டா தோட்டத்தில் பலஇடங்களில் இன்று இந்த தெய்வ வழிபாடுகள் கேபல் கம்பி பொருத்தப்பட்ட இடங்களில் இடம்பெற்று வருகின்றன.

கொழுந்து கொன்டு செல்ல அமைக்கப்பட்ட கட்டமைப்புகளுக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் நூற்றி ஐம்பது வருடங்களாகியும் இன்னும் உள்ளன. இதற்கு பயன்படுத்தப்பட்ட மரக்கட்டைகள் உக்காது இன்றும் உள்ளன. இந்த மரக்கட்டைதொழிலாளி ஒருவருடைய வீட்டுதோட்டத்தில் ஆட்டுப் பட்டிக்கு அருகில் உள்ளது. வெயில், மழை காலங்களில் தாக்கிப்பிடித்து எந்தவித சேதமும் இல்லாமல் உள்ளது. இந்த மரம் இரும்பை விட பலமானது. இது வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். இவை நூறு வருடங்களுக்கு மேலானவை. இவற்றை தொல் பொருளாக கருதி பாதுகாக்க வேண்டும் என்பது நியதி. இவற்றை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆர். நவராஜா...
தெல்தொட்டை தினகரன் நிருபர்

# மானுடவியல்

(தொடர்)



9

அதனால் தான் நீ வேறு மதம் மாற முடிந்தது. ஆனால் மதம் மாறியவுடன் நாள்கணக்காக வேறு மதத்தை இழிவு செய்யவும்... திட்டவும், தூசிக்கவும், வஞ்சிக்கவும் கற்றுக்கொண்டாய். இதைதான் உன் புதிய மதம் உனக்கு கற்று கொடுத்திருக்கிறது !!! இப்பொழுது நீ ஒழுக்கம் இல்லாமல் பேசுகிறாய். இப்போது சிந்தித்து பார் .... எந்த மதம் தனி மனித சுதந்திரத்தை, பண்பையும், நாகரிகமாக பேசுகின்ற ஒழுக்கத்தை கற்று தருகின்ற, போற்றுகின்ற மதம் என்று கேட்டேன். அதன் பிறகு அவன் மதம் குறித்து என்னுடன் பேசுவதில்லை.இந்து என்பது மதம் அல்ல. பண்டைய கால இந்திய மக்களின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம், கலாச்சாரம் ஆகியவற்றை உள்ளடக்கியது. இதை சில சிலர் மதம் என்று சொல்லி அதனையும் அதனை பின்பற்றுபவர்களையும் எதிரியை போல பார்கின்றனர்.

மதம் மாறிய நண்பர்கள் நினைவில் கொள்ள வேண்டும் உங்களுடைய முன்னோர் வணங்கி வழிபட்டு சென்ற மதம் இந்து மதம் தான் நீங்கள் பின்பற்றவில்லை என்றாலும் அவர்களை புண் படுத்தி பேசாதீர்

(தொடரும்)

தொகுப்பு:
கலாநிதி சிவஸ்ரீ கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்

# அறநெறி அறிவுநொடி

கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்



**16883) சிவபெருமானுக்கு எத்தனை மகன்கள்?** மூன்று

**16884) மூன்று மகன்களும் யார்?**
கார்த்திகேயன், கணேசன், ஐயப்பன்

**16885) சிவபெருமானுக்கு மூன்று மகன்கள் மட்டும் தான் இருக்கிறார்களா?**
இல்லை. மகள்களும் இருக்கிறார்கள்.

**16886) எத்தனை மகள்கள் இருக்கிறார்கள்?** மூன்று

**16887)** மூன்று மகள் மார்களும் யார்?
அசோக சுந்தரி, ஜோதி, வாசுகி.

**16888) சிவபெருமானுக்கு மகள்கள் இருப்பதாக எதில் கூறப்பட்டுள்ளது?**
சிவபுராணத்திலும் வேறு சில புராணங்களிலும்

**16889) சிவன் மற்றும் பார்வதியின் முதல் மகள் யார்?**
அசோக சுந்தரி

**16890) அசோக சுந்தரி பற்றிய விரிவான குறிப்புகள் எதில் உள்ளன?**
பத்ம புராணத்தில்

**16891) அசோக சுந்தரியை உருவாக்கியவர் யார்?** பார்வதி தேவி

**16892) பார்வதி தேவி இவரை ஏன் உருவாக்கினார்?**
தன் தனிமையை போக்கி கொள்வதற்காக

**16893) இவருக்கு அசோக சுந்தரி என பெயர் வைக்கக் காரணம் என்ன?** தனது சோகத்தை நீக்க உருவாக்கப்பட்டதாலும், மிகவும் அழகாக இருந்ததாலும்

**16894) சிவபெருமானின் இரண்டாவது மகள் யார்?**
ஜோதி.

**16895) ஜோதியின் வடிவம் எது?** ஒளி

**16896) ஜோதியின் பிறப்பிற்கு எத்தனை கதைகள் கூறப்படுகின்றன?**
இரண்டு கதைகள்

**16897) அந்த இரண்டு கதைகளில் முதல் கதை என்ன?**
அவர் சிவனின் ஒளிவட்டத்தில் இருந்து பிறந்தார் என்றும் அவர் சிவபெருமானின் உடல் வெளிப்பாடு எனவும் கூறப்படுகிறார்.

**16898) இரண்டாவது கதை என்ன?**
ஜோதி பார்வதி தேவியின் நெற்றியில் இருந்து வெளிப்பட்ட தீப்பொறியில் இருந்து பிறந்ததாக கூறப்படுகிறது.

**16899) இந்த இரண்டில் எது உண்மை?**
யாருக்கும் தெரியாது.

**16900) இந்த ஜோதியானவர் என்ன பெயரில் வணங்கப்படுகிறார்?**
ஜுவாலாமுகி

**16901) மூன்றாவது மகள் யார்?** வாசுகி

**16902) வாசுகி என்பவர் எப்படி வணங்கப்படுகிறார்?**
பாம்புக்கடியை குணமாக்கும் கடவுளாக வணங்கப்படுகிறார்.

**16903) இவர் சிவபெருமானின் மகள் என்றும் ஆனால் பார்வதியின் மகள் அல்ல கூறப்படுகிறது ஏன்?**
ஏனெனில் பாம்புகளின் கடவுளான கத்ரு செதுக்கிய சிலையின் மீது சிவபெருமானின் உயிரணுக்கள் விழுந்ததால் வாசுகி பிறந்தார். அதனால்தான் அவர் சிவனின் மகளாகவும், பார்வதியின் மகள் அல்ல எனவும் கூறப்படுகிறது.

**16904) சிவபெருமான் ஆலகால விஷத்தை குடித்த போது அவரை காப்பாற்றியது யார்?**
வாசுகிதான்.

**16905) இவருக்கு வேறு என்ன பெயர் இருக்கு?**
மானசா







கொழும்பு13, ஸ்ரீ கதிரேசன் வீதி, அருள்மிகு ஸ்ரீ காட்டுமாரி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ திருவிழா தேர்பவனி நேற்று முன்தினம் நடைபெற்றது. உற்சவ பிரதமகுரு சிவ ஸ்ரீ குகன் குருக்கள் பூசை நிகழ்த்துவதையும், கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, சிவநேசன் சர்மா, ஆலய தர்மகர்த்தா சிறீதரன் மகேஸ்வரி மற்றும் கலந்துகொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: எஸ்.உதயகுமார்)

# ஜனாதிபதியும் பிரதமரும் எமது நாட்டுக்கு கிடைத்துள்ள இரு பொக்கிஷங்கள்

## மாத்தறை வரவேற்பு நிகழ்வில் சபாநாயகர் புகழாரம்

**வெலிகமை தினகரன் நிருபர்**



இந்த நாட்டுக்கு சேவை செய்ய நல்ல தலைமைத்துவங்கள் கிடைத்துள்ளன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் இந்தநாட்டை நேசிக்கின்ற நாட்டுக்காக உழைத்த உத்தமர்கள். அதனால் இந்த நாடு நீண்டகாலம் செல்ல முன்னரே துரித அபிவிருத்திகாணும் என்பதில் சந்தேகமில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

மாத்தறை, தெய்யந்தர பகுதியில் இடம்பெற்ற வரவேற்புநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

பாராளுமன்றத்தின் உயர் பதவி சபாநாயகர் பதவிதான். இது எனக்கு வழங்கப்பட்டுள்ள நாட்டின் முக்கிய பதவி. அதனால் அப்பதவி எனக்கு கிடைத்துள்ளது. இப்பதவி மூலம் மக்களுக்கு சேவை செய்ய எவ்வித தடையும் கிடையாது. எதிர்காலத்தில் மக்களின் தேவைகளை நிறைவேற்ற மக்களுக்கு பணியாற்ற கடமைப்பட்டுள்ளேன்.

மக்களுக்காக என்னால் ஆற்றக் கூடிய முழுமையான உயர்ந்த சேவைகளை கடந்த 37 வருடங்களாக ஆற்றியுள்ளேன். மக்கள் சேவையை தொடர எனக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்ததை இட்டு மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த தேர்தலில் சிலர் என்னை வீட்டுக்கு அனுப்பப் பாடுபட்டனர். இருந்தாலும் அவர்கள் ஒருபோதும் அது முடியாது என்று நினைத்திருக்க மாட்டார்கள். மாத்தறை மாவட்ட மக்கள் நன்றி மறவாத பண்புள்ளம் கொண்டவர்கள். அதைநான் நன்கு புரிந்து வைத்துள்ளேன். அவர்கள் சரியான நேரத்தில் சரியான முடிவை எடுப்பவர்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தேர்தல் காலத்தில் எனது வெற்றிக்காக பல்வேறு உதவிகளை செய்தனர். இருந்தாலும் என்னைத் தோல்வியடையச் செய்ய சிலர் சதிகளில் ஈடுபட்டனர். எமது அணியைச் சேர்ந்தவர்கள் தான் இவ்வாறு சூட்சகமாக தந்திரமாக என்னை வீழ்த்துவதற்கு உழைத்தனர். என்றாலும் நான் எவ்வித கலவரமும் அடையவில்லை. மக்கள் மீது எனக்கு நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கை வீணாகவில்லை. மக்கள் என்னை நம்பி வாக்களித்துள்ளனர். அதற்காக நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் எல்லோரும் ஒரே அணியில் கைகோர்த்து ஒருநோக்கோடு வேலைசெய்தோம். காலம் கடந்த ஐந்து வருடகாலம் அபிவிருத்தி கஷ்டம் தான் எம்மை ஒன்றுபட வைத்தது.

நாம் இவ்வாறு விருப்புவாக்குகளை எடுத்தோம் என்பது முக்கியமல்ல, மாத்தறை மாவட்டத்தில் 6 பேர் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டதே மகிழ்ச்சிக்குரியதாகும்.

நாட்டில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த நாம் எதிர்பார்த்துள்ளோம். கடந்த காலங்களில் இனவாதத்தினால் நாம் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வந்தோம். இந்தத் தேர்தல் இனவாதத்தை புறக்கணித்து இனவாதம் பேசியவர்களை தோல்வியுறச் செய்துள்ளது எனவும் சபாநாயகர் தெரிவித்தார்.



காலி தலாபிடிய பகுதியை மதுபானம் மற்றும் போதைப் பொருள் அற்ற கிராமமாக மாற்றும் நோக்குடன் நபவிய்யா இஸ்லாமிய இளைஞர் அமைப்பு ஏற்பாடு செய்த நிகழ்வு அண்மையில் காலியில் நடைபெற்றது. இதன்போது வாகனங்களில் சிகரட் மற்றும் மது பாவனைக்கு எதிரான ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன. பொலிஸ் உயரதிகாரிகளும் இதில் கலந்து கொண்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

# மஹர சிறைச்சாலை வளாகத்தில் டென்னிஸ் விளையாட்டு மைதானம்

**(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)**



கம்பஹா மாவட்டத்திலுள்ள மஹர சிறைச்சாலை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட டென்னிஸ் விளையாட்டு மைதானத்தை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சரும் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் சுதர்ஷனீ பெர்னாண்டோபுள்ளே அண்மையில் வைபவரீதியாக திறந்து வைத்தார்.

இவ்வைபவத்தில் கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லஸந்த அழகியவண்ண , கம்பஹா மாவட்ட அபிவிருத்திச் சபையின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் சஹன் பிரதீப், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சரின் செயலாளர் கீதாமனீ கருணாரட்ன, சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய, மஹர சிறைச்சாலையின் அதிகாரி ஜகத் சந்தன வீரசிங்க, மஹர பிரதேச சபையின் தவிசாளர் சுதீமா சந்தனீ ஆகியோர் உட்பட மஹர சிறைச்சாலையின் உத்தியோகத்தர்கள், அரசியல் பிரமுகர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர் .


04.09.2020 மற்றும் 05.09.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 1,413,996

பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 72,053,096.00

ரூ.12,382,416.00 சுப்பர் பரிசு 01 ரூ.2,000,000.00 பரிசுகள் 04 ரூ.1,000,000.00 பரிசுகள் 03 ரூ.100,000.00 பரிசுகள் 46

NLB NATIONAL LOTTERIES

சீட்டிழுப்பு இலக்கம் 700
திகதி 2020/09/04
உத்தியோகபூர்வ முடிவுகள்

நீரோகா லக்ன ஜய

லக்கினம்: கும்பம்
வெற்றி இலக்கங்கள்: 02 03 24 41

| | பரிசு கட்டமைப்பு | பரிசு தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ.1,000,000/- | - |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களுடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 10,000/- | 3 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 2,000/- | 65 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்களுடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 200/- | 310 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100/- | 3,463 |
| 6ம் பரிசு | 1 இலக்கத்துடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 60/- | 4,662 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20/- | 50,284 |
| 8ம் பரிசு | லக்கினம் மட்டும் பொருந்துமாயின் | ரூ. 20/- | 18,640 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசு தொகை ரூ. 2,226,500.00
அடுத்த சுப்பர் பரிசு ரூ. 17,355,320.50

ரூ. 5 லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசு அரசாங்க வரி சட்ட திட்டங்களுக்கு அமைவானதாகும். பரிசுப்பணம் பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை அவசியமாகும்

வெல்லப்பட்ட லொத்தர் சீட்டு, சீட்டிழுப்பு நடைபெற்ற தினத்திலிருந்து 6 மாத காலம் மாத்திரமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
இல 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு 01.
அவசர அழைப்பு: 011 2324324, 011 4607000
இணையதளம்: www.nlb.lk

Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம்: 602
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 04/09/2020

ஆங்கில எழுத்து: E
சுப்பர் இலக்கம்: 22
வெற்றி இலக்கங்கள்: 31 51 58 77

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 03 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 158 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 336 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8,828 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5,587 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 143,315 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 26,184 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.232,739,665.95
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.13,843,300.80
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.12,966,112.00
இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 6,122,260.00

Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம்: 603
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 05/09/2020

ஆங்கில எழுத்து: W
சுப்பர் இலக்கம்: 07
வெற்றி இலக்கங்கள்: 42 47 59 72

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 07 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 147 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 348 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8,128 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5,276 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 134,441 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 24,604 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.232,971,411.95
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.14,075,046.80
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.13,197,858.00
இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 5,225,740.00

OFFICIAL RESULTS



DRAW DATE 05 / 09 / 2020
DRAW NUMBER 1532
சுப்பர் இலக்கம் 11
வெற்றி இலக்கங்கள் 12 45 50 55

| | | | |
|---|---|---|---|
| 1பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | - |
| 2பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 15,000.00 | 07 |
| 3பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 128 |
| 4பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 376 |
| 5பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 4912 |
| 6பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 4445 |
| 7பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 61592 |
| 8பரிசு | சுப்பர் இலக்கம் மாத்திரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 15330 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை Rs. 2,604,540.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியில் இருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 20,846,287.48

இல. 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01.
Phone : 0114 607 000, 0112 324 324
Fax : 0114 663 416 Web : www.nlb.lk

ජාතික සම්පත JATHIKA SAMPATHA ஜாதிக சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 1052
திகதி 2020.09.05
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 8 2 4 6 9 5

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | L | 8 | 2 | 4 | 6 | 9 | 5 | ரூ. 12,382,416.00 | 1 |
| 01 பரிசு | | 8 | 2 | 4 | 6 | 9 | 5 | ரூ. 2,000,000.00 | 0 |
| 02 பரிசு | | | 2 | 4 | 6 | 9 | 5 | ரூ. 100,000.00 | 2 |
| 03 பரிசு | | | | 4 | 6 | 9 | 5 | ரூ. 10,000.00 | 29 |
| 04 பரிசு | | | | | 6 | 9 | 5 | ரூ. 1,000.00 | 284 |
| 05 பரிசு | | | | | | 9 | 5 | ரூ. 50.00 | 2,922 |
| 06 பரிசு | | | | | | | 5 | ரூ. 20.00 | 27,815 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 07 பரிசு | | 8 | 2 | 4 | 6 | 9 | | ரூ. 10,000.00 | 3 |
| 08 பரிசு | | 8 | 2 | 4 | 6 | | | ரூ. 1,000.00 | 32 |
| 09 பரிசு | | 8 | 2 | 4 | | | | ரூ. 100.00 | 306 |
| 10 பரிசு | | 8 | 2 | | | | | ரூ. 50.00 | 2,958 |
| 11 பரிசு | L | | | | | | | ரூ. 20.00 | 12,776 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | | | | | | | ரூ. 200.00 | 227 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 14,400,236.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த புதன்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 4607000, 011 2324324
பக்ஸ்: 011 4669416

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 2531 சீட்டிழுப்பு திகதி 05.09.2020
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 02 06 27 66

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 04 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 168 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 428 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 9758 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6493 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 162399 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 29570 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 208,821
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 7,238,900.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,879,397.60

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324
Fax: 0114 663 416 Web: www.nlb.lk

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 2530 சீட்டிழுப்பு திகதி 04.09.2020
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 25 33 53 67

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 09 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 188 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 392 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10363 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6836 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 170122 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 31081 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 218,992
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 8,001,800.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,545,294.80

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324
Fax: 0114 663 416 Web: www.nlb.lk

சீட்டிழுப்பு இலக்கம் : 4236 உத்தியோகபூர்வ முடிவுகள்
மஹஜன சம்பத
திகதி: 05-09-2020
வெற்றி எழுத்து W வெற்றி இலக்கங்கள் 5 5 0 8 8 5

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 5 5 0 8 8 5 | ரூபா 2,000,000/- | 02 |
| 2ஆம் பரிசு | 5 0 8 8 5 | ரூபா 100,000/- | 10 |
| 3ஆம் பரிசு | 0 8 8 5 | ரூபா 10,000/- | 103 |
| 4ஆம் பரிசு | 8 8 5 | ரூபா 1,000/- | 1,018 |
| 5ஆம் பரிசு | 8 5 | ரூபா 100/- | 10,210 |
| 6ஆம் பரிசு | 5 | ரூபா 20/- | 101,389 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 5 5 0 8 8 | ரூபா 10,000/- | 09 |
| 8ஆம் பரிசு | 5 5 0 8 | ரூபா 1,000/- | 108 |
| 9ஆம் பரிசு | 5 5 0 | ரூபா 100/- | 1,023 |
| 10ஆம் பரிசு | 5 5 | ரூபா 50/- | 10,115 |
| 11ஆம் பரிசு | W | ரூபா 20/- | 40,442 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 11,711,670.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.31,510,416.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை www.nlb.lk
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

சீட்டிழுப்பு இலக்கம் : 4235 உத்தியோகபூர்வ முடிவுகள்
மஹஜன சம்பத
திகதி: 04-09-2020
வெற்றி எழுத்து E வெற்றி இலக்கங்கள் 6 1 4 2 2 5

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 6 1 4 2 2 5 | ரூபா 2,000,000/- | 02 |
| 2ஆம் பரிசு | 1 4 2 2 5 | ரூபா 100,000/- | 11 |
| 3ஆம் பரிசு | 4 2 2 5 | ரூபா 10,000/- | 108 |
| 4ஆம் பரிசு | 2 2 5 | ரூபா 1,000/- | 1,087 |
| 5ஆம் பரிசு | 2 5 | ரூபா 100/- | 10,793 |
| 6ஆம் பரிசு | 5 | ரூபா 20/- | 106,991 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 6 1 4 2 2 | ரூபா 10,000/- | 12 |
| 8ஆம் பரிசு | 6 1 4 2 | ரூபா 1,000/- | 108 |
| 9ஆம் பரிசு | 6 1 4 | ரூபா 100/- | 1,113 |
| 10ஆம் பரிசு | 6 1 | ரூபா 50/- | 10,629 |
| 11ஆம் பரிசு | E | ரூபா 20/- | 42,920 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 12,215,270.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.31,510,416.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை www.nlb.lk
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

தன நிதானய உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி - 2020/09/04
சீட்டிழுப்பு இலக்கம் - 311
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 26 38 48 51

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | - |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 62 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 152 |
